# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report

# 2015

සීමාසහිත ලංකා සීනි සමාගම
லங்கா சீனி நிறுவனம் லிமிட்டெட்
Lanka Sugar Company (Private) Limited.



லங்கா சீனி கம்பெனி (பிரைவேட்) லிமிட்டட்

# வருடாந்த அறிக்கை
# 2015

27, மெல்போர்ன் எவனியு, கொழும்பு 4, சிரிலங்கா. தொலைபேசி: +94 11 523 2583 பெக்ஸ்: +94 11 250 0674 மின்அஞ்சல்: Infosugarsrilanka@gmail.com


இன்பகரமான வெற்றியின்
பயணத்தின் ஆரம்பம்.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது தத்துவம், நோக்கு, குறிக்கோள்கள், மூலோபாயங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு | 04 |
| நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள் | 06 |
| தலைவர் கூற்று | 08 |
| இடர் முகாமைத்துவம் | 13 |
| எமது காலாச்சாரம் மற்றும் விழுமியங்கள் | 14 - 16 |
| உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கை | 17 - 18 |
| பணிப்பாளர் சபை | 19 - 21 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மற்றும் நிறுவகக் கட்டமைப்பு | 22 - 26 |
| சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை | 27 - 44 |
| விரிவான வருமானக் கூற்று | 45 |
| நிதி நிலைமை கூற்று | 46 |
| உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று | 47 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 48 - 66 |
| நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள் | 67 - 86 |
| கூறாக்கப்பட்ட நிதி தகவல்கள் - பெல்வத்த மற்றும் செவனகல | 87 - 94 |
| வரைபடங்களுடன் கூறாக்கப்பட்ட ஒப்பீடு - பெல்வத்த மற்றும் செவனகல | 95 |
| செயன்முன்னேற்ற அறிக்கை | 96 - 99 |
| கூட்டமைப்புத் தகவல் | 100 |

## எமது தத்துவம்

கிராமியப் பொருளாதார முன்னேற்றத்தினூடாக தேசிய அபிவிருத்திக்குப் பங்களித்து, சீனியை அடிப்படையாகக் கொண்ட விவசாய மற்றும் கைத்தொழில் சார்ந்த விவசாயிகளின் சமூக-பொருளாதாரத்தை உயர்த்துதல்.

## எமது தொலைநோக்கு

சீனி உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்

## எமது நோக்கங்கள்

பணி இலக்கு 333 – குறுங்கால நோக்கங்கள்
( 3 வருடங்கள் 2018 அளவில் )

- 80,000 மெட்டிக் தொன் சீனி உற்பத்தியை அடைதல்
- 15,000 விவசாயக் குடும்பங்களிற்கு உதவுதல்.
- 8,000 பேருக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பளித்தல்
- தலா ஒரு விவசாய குடும்பத்தின் தேறிய வருமானத்தை ரூபா 35,000 வரை உயர்த்தல்.
- தேசிய சீனித் தேவைப்பாட்டில் 15% பங்களித்தல்
- ரூபா 2.2 பில்லியன் தேறிய வருமானத்தை எய்தல்
- ரூபா 10 பில்லியன் பெறுமதியான அன்னிய செலாவணியைச் சேமித்தல்.
- 30 மெகாவோட் மின்சக்தியை துணை உற்பத்தி செய்தல்

பணி இலக்கு 777 – நீண்ட கால நோக்கங்கள்
( 7 வருடங்கள் 2020 அளவில் )

- 100,000 மெட்.தொன் சீனி உற்பத்தியை அடைதல்
- 20,000 விவசாயக் குடும்பங்களிற்கு உதவுதல்.
- 10,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பளித்தல்
- தலா ஒரு விவசாய குடும்பத்தின் தேறிய வருமானத்தை ரூபா 40,000 வரை உயர்த்தல்.
- தேசிய சீனித் தேவைப்பாட்டில் 20% பங்களித்தல்
- ரூபா 3.5 பில்லியன் தேறிய வருமானத்தை எய்தல்
- ரூபா 20 பில்லியன் பெறுமதியான அன்னிய செலாவணியைச் சேமித்தல்.
- 50 மெகாவோட் மின்சக்தியை துணை உற்பத்தி செய்தல்

## மூலோபாயங்கள்

- வெற்றி - வெற்றி வியாபாரப் பங்குடமைக்கான எமது விவசாயி சார்ந்த வளர்ப்பு மாதிரி
- நன்றாக விளையும் வகைகளுடன விளைச்சலை விருத்தி செய்து, வினைத்திறன்மிக்க விஸ்தரிப்பு சேவைகளுடனான சிறந்த கமத்தொழில் செயன்முறைகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு சிறந்த பலன்களை உறுதிப்படுத்தல்.
- அளவுகள், தர உற்பத்தி ஊக்குவிப்புகளின் மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல்.
- செயலாற்றல் சார்ந்த திட்டங்களின் மூலமும் உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளின் மூலமும் பதவியணியை ஊக்குவித்தல்.

## ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

இலங்கை சீனி ஆராய்ச்சி நிறுவகத்தின் ஒருங்கிணைப்புடன் கரும்பு மற்றும் சீனி உற்பத்தித் திறன் அபிவிருத்திக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு

கரும்புச் செய்கையாளர்களின் பெறுமதியை நாம் அதிகரிக்க வேண்டியதுடன் நாம் தொழிற்படும் சுற்றாடலிற்கும் சமூகத்திற்கும் பெறுமதி சேர்க்க வேண்டும் என நாம் நம்புகின்றோம்.


இனிப்பான வெற்றிக்கான
வளம்மிக்க செல்வம்

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**

**நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள் - 2015**

| (தொகைகள் மில்லியன் ரூபாய்களில் அமைந்துள்ளன) | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| **நிதிசார் முக்கிய அம்சங்கள்** | | | |
| புரள்வு | 4,881.64 | 5,539.31 | 5,747.05 |
| விற்பனைக் கிரயம் | (5,065.36) | (4,904.06) | (3,833.75) |
| மொத்த இலாபம் | (183.72) | 635.25 | 1,913.30 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | (1,052.40) | (211.01) | 1,345.72 |

| தொழிற்படுசார் செயலாற்றுகை | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| **காணிப் பயிர்ச்செய்கை** | | | |
| பயிர்செய்யக் கூடிய பகுதி (ஹெக்டேயர்) | 17,499 | 17,499 | 17,499 |
| பயிர்ச்செய்கை செய்யப்பட்ட பகுதி (ஹெக்டேயர்) | 12,226 | 11,280 | 10,314 |
| பயிர்ச்செய்கை செய்யப்பட்ட பகுதியின் சதவீதம் (%) | 70% | 64% | 59% |

| அறுவடை நிகழ்வுத் திட்டம் | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| அறுவடை செய்யப்பட்ட கரும்பு - மெற்றிக் தொன் | 557,747 | 409,582 | 510,104 |
| கடந்த ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு/(குறைவு) சதவீதம் | 36% | -20% | 35% |
| கரும்பு விளைச்சல் சதவீதம் (%) | 7.53% | 7.90% | 8.34% |

| சீனி உற்பத்தி | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| உற்பத்தி மெற்றிக் தொன்களில் | 42,984 | 32,364 | 42,549 |
| தலா ஒரு வருடத்திற்கு தலா ஒரு நபருக்கான தொன் | 8.19 | 6.17 | 7.57 |

| மனித மூலவளங்கள் | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| நிரந்தர | 1,488 | ,1557 | 1,630 |
| ஒப்பந்த | 510 | 492 | 736 |
| அமைய | 3,129 | 2,645 | 2,530 |
| பருவகால | - | 510 | 685 |
| பயிலுனர் | - | 40 | 41 |
| **மொத்த எண்ணிக்கை** | **5,127** | **5,244** | **5,622** |
| | | | |


இனிப்பான வெற்றியானது
வானத்தைச் சென்றடைவதால்



## தலைவர் கூற்று

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடனான ஆண்டறிக்கையை பணிப்பாளர் சபை சார்பாக சமர்ப்பிக்கப்படுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கம்பனியின் மீளாய்வாண்டு, செயலாற்றுகையைப் பாதிக்கத்தக்க ஏராளமான பேரண்ட மற்றும் சிற்றண்டப் பொருளாதாரக் காரணிகளுடன் சவால் மிக்கதாக இருந்தது. எனினும், பாதகமான காலநிலை நிலமைகளுக்கு மத்தியிலகரும்பு விளைச்சல் தலா ஒரு ஹெக்டேயருக்கு 39.38 மெட்ரிக் தொன்னில் இருந்து 59.95 மெட்ரிக் தொன் வரை அதிகரித்திருந்த போதிலும், சீனி மீட்பு வீதம் 7.90% இருந்து 7.71% வரை வீழ்ச்சி உற்றிருந்தமை உற்பத்தி அளவில் தாக்கம் ஏற்படுத்தியிருந்தது.

### பொருளாதாரச் சூழல்

2015 ஆம் ஆண்டில் இலங்கையில் மெய்ப் பொருளாதார வளர்ச்சி வீதமானது 4.8% ஆக இருந்தது, இது 2014 இல் 4.9% ஆக இருந்தது. இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதி சந்தைகளில் கேள்வியின் அதிகரிப்பிலான மந்தநிலை ஏற்றுமதி துறையின் வளர்ச்சியை பாதித்திருந்ததுடன், வலுப்படுத்தும் அமெரிக்க பொருளாதாரம் குறுகிய கால மூலதன வெளியீட்டைத் தூண்டியது. இந்த முன்னேற்றங்களின் தாக்கம் சர்வதேச பொருட்களின் விலைகளைக் குறைப்பதன் மூலம் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. எனினும், வருமானம் அதிகரித்ததால், குறிப்பாக அரச துறை ஊழியர்கள் மத்தியில உள்நாட்டு நுகர்வு மீண்டும் அதிகரித்தது. பொருளாதாரத்தின் மூன்று துறைகளும் 2015 ஆம் ஆண்டில் உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்தன. விவசாயம் மற்றும் சேவைகள் துறைகளின் நடவடிக்கைகள் முறையே 5.5% மற்றும் 5.3% இனால் வளர்ச்சியடைந்தன, அதே நேரத்தில் கைத்தொழில் துறையுடன் தொடர்பான நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் 3.0% ஆல் வளர்ச்சியடைந்திருந்தன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் (சிசிபிஐ) ஆண்டுக்கான மாற்றத்தின் அடிப்படையில் அளவிடப்படும் பணவீக்கமானது 2015 ஆம் ஆண்டின் ஜூலை-செப்டம்பர் காலப்பகுதியில் வீச்சில் காணப்பட்டது.

### கைத்தொழில் கண்ணோட்டம்

கைத்தொழில் இயற்கையால் பாரியளவில் தாக்கப்பட்ட போதிலும், ஆண்டின் போது 42,984 மெட்ரிக் தொன்கள் அளவான சீனியை எம்மால் உற்பத்தி செய்யக் கூடியதாக இருந்ததுடன் இது உள்நாட்டு சீனி தேவைப்பாட்டின் 7% ஆகக் காணப்பட்டது. இது உள்நாட்டு சீனி உற்பத்தியின் 72% ஆகவும் காணப்பட்டது.

சீனி விலைகள் உலகளாவிய ரீதியில் குறித்த ஆண்டின் போது பாரிய அளவில் வீழ்ச்சி கண்டிருந்ததுடன் சீனி இறக்குமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாரிய அளவில்

அதிகரித்திருந்ததுடன் இறக்குமதியாளர்கள் தமது சொந்த காப்பிருப்புக்களைக் கொண்டிருந்தனர். இது சந்தையில் விற்பனை விலையை வீழ்ச்சியடையச் செய்ததுடன், பெருமளவு மொத்த விற்பனையாளர்கள் நாம் வழங்கிய விலைகளில் சீனியைக் கொள்வனவு செய்வதில் தயக்கம் காண்பித்தனர். அரசாங்கம் பின்னர் சீனி மீதான வரியை அதிகரித்த போதிலும், இதன் தாக்கத்தை முற்றாக முன்னைய நிலைக்குக் கொண்டுவர முடியாதிருந்தது. ஆண்டின் பிற்பகுதியில் சீனியின் மொத்த விற்பனை விலை தலா ஒரு கிலோவிற்கு ரூபா 90 இற்குக் கீழ் வீழ்ச்சியடைந்திருந்தது.

**கம்பனி செயலாற்றல்**

மீளாய்விற்கு உட்பட்ட நிதி ஆண்டின் போது, ரூபா 4,882 மில்லியனான இலாபத்தினை பதிவு செய்திருந்ததுடன், அது கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 5,539 மில்லியன் வருமானத்தினை கம்பனி பதிவு செய்திருந்தது. கம்பனி 2015 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான செயற்பாட்டு நட்டமாக ரூபா 1052 மில்லியன் தொகையை பதிவு செய்திருந்ததுடன், இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 500 சதவீத வீழ்ச்சியாகும். 2014 ஆம் ஆண்டின் சீனி உற்பத்தியானது 32,364 மொ.தொன்களாக காணப்பட்டதுடன், அது 2015 ஆம் ஆண்டின் போது 42,984 மொ.தொன்கள் வரை அதிகரித்திருந்தது. குறைந்த விலையில் அதிக அளவிலான சீனி இறக்குமதி செய்யப்பட்டமையால், சீனியின் விற்பனை விலை குறைவடைந்த காரணத்தால் சீனியின் மூலமான விகிதாசார இலாப வீதத்தினை அடைய முடியாதிருந்தது. இஎன்ஏ இன் உற்பத்தியானது 2014 ஆம் ஆண்டின் போது 9,575,757 லீட்டர்களால் குறைவடைந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் போது 7,317,351 லீட்டர்களால் குறைவடைந்தமையால் ஆண்டிற்குரிய வருமானமானது ரூபா 762 மில்லியன்களால் குறைவடைந்திருந்தது. ஆண்டிற்கான விற்பனைக் கிரயம் ரூபா 161 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும், மொத்த வருமானமானது ரூபா 658 மில்லியனால் குறைவடைந்திருந்தது. ஆண்டினுள் நிதிச் கிரயம் ரூபா 30 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன், நிதி வருமானம் ரூபா 43 மில்லியனால் குறைவடைந்திருந்தது. இவ் அனைத்து காரணிகளும் கம்பனியின் தேறிய இலாபத்திலான வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தது.

**நலன்புரி**

ஆண்டின் போது நலன்புரிக்காக கணிசமான தொகையைக் கம்பனி செலவிட்டிருந்தது. காப்பகத்திற்காகவும் உட்கட்டமைப்பிற்காகவும் வேறான உத்தியோகத்தர்கள் ஒதுக்கப்பட்டிருந்தனர். கம்பனியால் தொழிலாளர் குடும்பங்களின் குழந்தைகளுக்கான பாடசாலைப் போக்குவரத்தையும் வழங்கியிருந்தது. கம்பனியால் ஆரம்பப் பாடசாலையும் குழந்தைகள் காப்பகமும் பராமரிக்கப்படுகின்றது.

**எதிர்கால நோக்கம்**

முன்னோக்குகையில், இலங்கைப் பொருளாதாரம் வேகமாக முன்னோக்கிச் செல்வதுடன் அதன் அபிவிருத்தி இலக்குகளையும் அடைவதற்கு உள்ளது. எதிர்பார்க்கப்படுகின்றது.. அரசாங்கக் கொள்கைகளும் வட்டி வீத வீழ்ச்சிகளும் புதிய முதலீட்டு மாற்றீடுகளை எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றன. எமது உற்பத்திக்கென ஓர் திட்டவட்டமான வியாபாரப் பொருள் சந்தை உள்ளது. கரும்பிற்கான உற்பத்திப் பகுதியை அதிகரிப்பதில் தொடர்ந்தும் சபை கவனம் செலுத்தி வருகின்றது. சிறந்த விளைவைப் பெறுவதற்கு தற்போதுள்ள விவசாயிகளை ஊக்குவிப்பதும் புதிய விவசாயிகளைக் இத் துறைக்குள் கொண்டுவருவதும் அவசியமாகும்.

புதிய காணி நிலங்களை உள்ளீர்த்து எமது சொந்த பயிர்ச் செய்கை உற்பத்தித் திறனை அதிகரிப்பது முக்கியமானதாகும். பிரதான உற்பத்திப் பொருளுக்கு மேலதிகமாக எமது தொழிற்பாட்டின் அதிகூடிய நன்மையை அடைவதற்கு துணை உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்வதிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

**பாராட்டு**

2015 ஆம் ஆண்டின் காலப்பகுதியிலும் கடந்த காலப்பகுதியிலும் தங்கள் அரிய பணிகளையும் பெறுமதிமிக்க பங்களிப்பையும் வழங்கியிருந்த முன்னைய பணிப்பாளர் சபைக்கும் கம்பனியின் முகாமைத்துவத்திற்கும் உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கம்பனியுடன் எப்போதும் கைகோர்த்து செயற்பட்டமைக்காக கரும்புச் செய்கையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும், சீனி மொத்த விற்பனை வணிகர்களுக்கும், வங்கியாளர்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக, குறையேதுமின்றி வெற்றிப் பாதையை நோக்கி கம்பனியைக் கொண்டு செல்வதில் எமக்கு வழிகாட்டி வரும் புதிய பணிப்பாளர் சபைக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நவின் அதிகாரம**

தலைவர்



## பணிப்பாளர் /பிரதான நிறைவேற்று அதிகாரியின் கூற்று

### வியாபாரச் சூழல்

2015 ஆம் ஆண்டு கம்பனிக்கு மாறுபட்ட பெறுபேறுகளை ஏற்படுத்தியது. இதன் காரணமாக நிதி நிலைமைகளில் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டது. 2014ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாதகமான தாக்கங்கள் மற்றும் இவ்வருடத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டு ரீதியான நடைமுறைகள் ஆகியன செவனகல மற்றும் பெலவத்த பெருந்தோட்டங்களில் பயிர் விளைச்சலை பெரிதும் பாதித்தது. பருவமழை பொய்த்துப்போனதன் காரணமாக இப்பிரச்சினை மேலும் அதிகரித்தது. முறையான விற்பனை செயல்முறைகள் இடம் பெறாததன் காரணமாக பருவ காலத்திற்கு ஏற்ப விலை தளம்பல் ஏற்படுகின்ற சீனி மற்றும் ENA சந்தைகள் மூலமாக கம்பனிக்கு கிடைக்கின்ற விலை அதிகரிப்பு இலாபங்களும் இல்லாமல் போயின. 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு கிலோ சீனிக்கான விலை இலங்கை ரூபாய் 72 ஆகவும், ஒரு லீட்டர் LKR இற்கான விலை 290 ரூபாயாகவும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் பேணவேண்டிய நிர்ப்பந்தம் கம்பெனிக்கு ஏற்பட்டது. மேற்குறிப்பிட்ட காரணிகளின் காரணமாக கம்பெனிக்கு மொத்தமாக இலங்கை ரூபாய் ஒரு பில்லியன் நட்டம் ஏற்பட்டது.

### புதிய முகாமைத்துவம்

கம்பெனியின் சிறப்பான வளர்ச்சியை கருத்திற்கொண்டு புதிய முகாமைத்துவம் கம்பனியை பொறுப்பேற்றது. இது கடுமையான நிதி ரீதியான சுமைகள் மற்றும் ஒரு ஹெக்டயருக்கான விளைச்சல் பெருந்தோட்டத்துறையில் குறைந்தமை போன்ற பிரச்சினைகளை எதிர்கொண்டது. முகாமைத்துவம் பொறுப்பினை ஏற்ற தருணத்தில் ஒரு ஹெக்டயருக்கான விளைச்சல் சுமார் 60 மெட்ரிக் டொன்னாக காணப்பட்டது. இது கைத்தொழிற்துறை சராசரியை விட குறைவானதாகும். அரைக்கின்ற செயன்முறையின் பொழுது ஏற்பட்ட தொழிற்சாலை ரீதியான பாரிய இழப்புகள் மற்றும் 2015 டிசம்பரில் ஏற்பட்ட வறட்சி ஆகியன பாரிய இழப்புக்கு பங்களிப்புச் செய்த ஏனைய காரணிகளாகும். கரும்பை அறுவடை செய்வதில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் அறுவடை செய்த கரும்பை தளங்களில் வைத்திருத்தல் போன்றன ஏனைய பிரதான பிரச்சினைகள் ஆகும். இருப்பினும் புதிய முகாமைத்துவமானது சகல பிரச்சினைகள் தொடர்பிலும் அவற்றை தீர்ப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் இலாபத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அதேவேளை பாதகமான விளைவுகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

**தொழில்நுட்பம்**

காசோட்டம் சார்ந்த விடயங்களை சீர் செய்யும் முகமாக தொழில்நுட்பக் குழுவிற்கு பாரிய செயற்பணிகள் காணப்படுகின்றன. முறையான வெளிப்படைத்தன்மை மிக்க முறையில் விற்பனை முறைகளை பகுப்பாய்வு செய்து அவற்றை தாபித்தல் சகலவிதமான தொழில்நுட்ப விடயங்களையும் மதிப்பீடு செய்தல், பிரச்சனைகளை இனங்காண்பதுடன் **2016** ஆம் ஆண்டிற்கு முன்னர் நான்கு வீதத்தை விட அதிகமாக காணப்பட்ட தொழிற்சாலையின் நட்டங்களை சீர்செய்தல் போன்றன இவற்றுள் உள்ளடங்கும். வடிசாலையுடன் தொடர்புபட்ட தரம் சார்ந்த பிரச்சினைகளை சீர் செய்வதும் இச்செயற் பணியில் உள்ளடங்கும். அறுவடை சார்ந்த பிரச்சினைகளை நோக்குகையில் வளமான திறமைமிக்க கரும்பு அறுவடையாளர்களுக்கு இயந்திரங்களை வழங்கி அறுவடை செய்வதன் மூலம் அறுவடையை துரிதப்படுத்த முடியும். மேலும் கரும்பை வாகனங்களில் ஏற்றுவதற்காக அதிகமானவர்களை பணிக்கு அமர்த்துவதன் மூலம் அறுவடை செய்யப்பட்ட கரும்பு தேங்கி இருப்பதை தவிர்க்க முடியும். தொழிற்சாலைகளின் ஆற்றல்களை மேலும் அதிகரிக்கும் முகமாகவும் மேலதிக பயிர்களை களஞ்சியப்படுத்தும் முகமாகவும் தொழிற்சாலைகள் சீர் செய்யப்படல் வேண்டும். இதன் மூலம் மேலும் உரிய நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் மேலதிக பெருந்தோட்டம் சார்ந்த திட்டங்கள் ஆகியவற்றின் காரணமாக அதிகளவு அறுவடைகள் வந்து சேரலாம்.

**மனித வளங்கள்**

கம்பனியின் வெற்றியானது அதன் ஊழியர்களினால் ஏற்படுத்தப்படுகிறது. கம்பெனியின் பெறுமானங்களை அடிப்படையாகக்கொண்டு ஊழியர்கள் வழி நடத்தப்படுவதுடன் எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்களது பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது மற்றும் எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது ஊழியர்கள் வாடிக்கையாளர்கள், மேன்மைகள், ஒற்றுமை, நிலைப்பேரானத்தன்மை எமது சமுதாயம் ஆகியன தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. எமது பெறுமதியான வளங்களை எம்முடன் பேணி வைத்திருப்பதற்காக உரிய பயிற்சிகளும் அபிவிருத்திகளும் அவசியப்படுகின்றன. இவற்றுள் எமது ஆளணியினர், விவசாயிகள் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். எனவே முறையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்காலத்தில் பேணுவதற்கு எமது கம்பெனி மிகவும் முன்னுரிமை அளித்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் எமது சகல ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவத்தை சேர்ந்த அனைவருக்கும் அவர்களது கடும் உழைப்பு அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இவர்களது ஒட்டுமொத்த முயற்சிக்கும் பாராட்டுதல்களை தெரிவிக்கின்ற அதேவேளை நாம் அனைவரும் ஒன்றாக திரண்டு எமக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் எமது சகல பங்கீட்டுப்பாட்டாளர்களும் நன்மை அடையக் கூடிய விதத்தில் உயர்வாக பயன்படுத்துவோம்.

எம்.எச்.ஏ. சத்தார்

பணிப்பாளர் / பிரதம நிறவைற்று அலுவலர்

# இடர் முகாமைத்துவம

| இடர்களின் வகை | விபரம் | செயல்நடவடிக்கைத் திட்டம் |
|---|---|---|
| செயற்பாட்டு இடர்கள் | கரும்பு பயிர்ச்செய்கைக்கான காணிகளை கண்டறிதல். | • கரும்பின் விலையை ரூபா 4,200 இலி இருந்து ரூபா 4,500<br>• வரை அதிகரித்தல்<br>• விதை முற்பணங்கள் மற்றும் ஏனைய மூலப்பொருட்களை கடன் அடிப்படையில் வழங்குதல்<br>• அரசின் உர மானியத்தின் மூலம் கரும்பு விவசாயிகளும் நன்மை பெற்றுள்ளனர். |
| கடன் இடர் | விவசாயிகளுக்கு மூலப்பொருட்களை வழங்குவதன் மூலம் உருவாகும் ஐயக்கடன். | கடனை மீள அறவிடுதல் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு அதிக பொறுப்புகளை சாட்டுதல். |
| பணவீக்க இடர் | மேந்தலைகள் மற்றும் மூலப்பொருள் கிரயம் ஆகியவற்றின் காரணமாக இலபத்தன்மையில் ஏற்படக்கூடிய தாக்கங்கள். | உற்பத்தி திறனை அதிகரித்தல் மற்றும் உற்பத்தி கிரயத்தினை குறைத்தல் தொடர்பில் கவனம் செலுத்துதல். |
| சந்தை இடர் | உள்நாட்டு சீனி இறக்குமதியாளர்களால் குறைந்த விலையில் சீனி இறக்குமதி செய்யப்படல். | அலகொன்றிற்கான மேந்தலைக் கிரயத்தினை குறைப்பதற்காக உற்பத்தியின் அளவினை அதிகரித்தல். |
| சுற்றாடல் இடர் | யானைகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக கரும்பு பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் அறுவடையில் வீழ்ச்சியினை ஏற்படுத்தும். | யானைக்கான அகழிகள், வேலிகள் மற்றும் மனித தடைகளை கம்பனியின் செலவில் உருவாக்குதல். |

# எங்கள் கலாச்சாரமும் விழுமியங்களும்

## எமது விவசாயிகள்

விவசாயியே எமது அரசராவர். விவசாயிகளே கம்பனியின் பிரதான, மிக முக்கியம் வாய்ந்த பங்குதாரர்களில் ஒருவர் என வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி நம்புகின்றது. விவசாயிகளால் அனேகமாக அனைத்துக் காணிகளும் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படுவதனால் செவனகல பிரிவு தங்கள் சொந்த வேளாண்மைக்கென மட்டுப்படுத்தப்பட்ட காணிகளை மாத்திரமே கொண்டுள்ளமை அதற்கு பாரதூரமான காரணியாக உள்ளது.

ஒரு ஹெக்டேயர் கரும்புப் பயிர்ச்செய்கையிலிருந்தான சராசரி வருமானம் தலா ஒரு மாதத்திற்கு ஏறத்தாழ ரூபா 35,000 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏராளமான பகுதிகளில் கரும்புச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு குறைந்த அளவு வருமானமே கிடைத்துள்ளது. இந் நிலை இத் துறையில் விவசாயிகள் நிலைத்திருப்பதை உற்சாகமிழக்கச் செய்து இதற்குப் பதிலாக வேறு பயிர்ச்செய்கைகளில் அவர்கள் நாடியிருந்தனர். லங்கா சீனி, இந் நிலையை ஆரம்ப நிலையிலேயே இனங்கண்டு விவசாயிகளுக்கு தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு உதவுவதற்காக பல வழிமுறைகளை மேற்கொண்டது. தற்போது ஒரு விவசாயிக்கு தலா ஒரு மெற்றிக் தொன் கரும்பிற்கு ரூபா 4,500 கொடுப்பனவு செய்யப்படும் அதேவேளை முன்னர் தலா ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூபா 4,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறாக, கரும்புப் பயிர்ச் செய்கை வரலாற்றில் தலா ஒரு மெற்றிக் தொன்னிற்கு ஆகக் கூடுதலான விலையை தற்போது வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியே வழங்கி வருகின்றது.

## எமது வாடிக்கையாளர்கள்

எமது வாடிக்கையாளர்களே எமது எதிர்பார்ப்பாகும். எமது சனத்தொகையில் 20 மில்லியனிற்கும் மேலானவர்கள் எமது வாடிக்கையாளர்களே. அவர்களுக்கு தரமானதும் சேதன சீனியை நியாய விலையில் வழங்குவதே எமது முக்கிய நோக்காகும். இலங்கையர் ஒருவரின் ஒரு வருடத்திற்கான சீனி நுகர்வு 30 முதல் 35 கிலோ வரையாக உள்ளது. எமது உற்பத்திக் கொள்ளளவு 6% ஆக நிலவுவதுடன் எஞ்சிய 94% இறக்குமதி செய்யப்பட வேண்டியதாக உள்ளது. சீனி இறப்புமதிக்காக வருடாந்தம் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேலாக செலவிடப்படுகின்றது. எமது பொருளாதாரத்தில் இது ஓர் பாரிய பாதகமான தாக்கத்தை விளைவிக்கின்றது.

## எமது ஊழியர்கள்

எமது ஊழியர்களே எமது அரிய செல்வமாகும். எந்த ஒரு நிறுவனமும் விசுவாசமானதும் ஊக்குவிக்கப்பட்ட ஊழியர்கள் இன்றி வெற்றியடைவதில்லை. தொழிற்பாட்டு விளைவுகள் எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மட்டத்தின் பிரதிபலிப்புக்கள் எனலாம். லங்கா சீனியின் ஓர் முக்கிய காரணியில் மனித வளம் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னைய காலத்தில், சீனித் துறையில் ஈடுபட்ட ஊழியர்கள் தமது வாழ்க்கையில் பலவிதமான மன

நிறைவற்ற நிலைகளிற்கு தொழில் நியதிகள், மிகக் குறைந்த அளவிலான மாதாந்த வருமானம், மிகை ஊதியம் தொடர்பான பிரச்சனைகளையும் பதவி உயர்வுகள் முதலிய பிரச்சனைகளையும் எதிர்நோக்கியிருந்தனர். இக் காரணிகளைக் கருத்திற்கொண்டு லங்கா சீனிக் கம்பனி அதற்கு முன்னுரிமை அளித்து பிரச்சனைகளிற்குப் பரிகாரம் தேடத்தொடங்கியது.

**நல்லாட்சி**

எமது சட்டரீதியான கணக்காய்வாளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமாகும்.

வெளிக் கணக்காய்வாளர்களுக்கு மேலதிகமாக, பெல்வத்த மற்றும் செவனகல ஆகிய இரு பிரிவுகளும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களங்களைக் கொண்டுள்ளதுடன் நேரடியாக தலைவருக்கும் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கும் நேரடியாக அறிக்கையிடப்படுகின்றது. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்ட குழு உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகளைக் கிரமமான முறையில் மீளாய்வு செய்து வருவதுடன் சிரேஷ்ட முகாமையாளர்களிடமிருந்து விளக்கம் கோரி, அறிக்கைகளைத் தாங்கள் கண்டறியும் காண்புகளுடன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கின்றது.

**தடைகள்**

இன்னமும் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சனைகள் உள்ளமையால் நாம் அவற்றை எதிர்காலத்தில் தீர்ப்பதற்குக் குறியாக உள்ளோம்.

பெல்வத்த மற்றும் செவனகல அமைவிடங்களில் புதிய கம்பனிக்கு உரித்தற்ற அசையும் சொத்துக்களைக் கொண்டுள்ளன. சட்ட ரீதியான நடைமுறைகள் பூர்த்தியாகும் வரை நாம் காத்திருந்து அவற்றை அகற்றுவதற்கோ அல்லது நடைமுறையில் உள்வாங்குவதற்கோ எதிர்பார்த்துள்ளோம்.

காணிச் சுவீகரிப்பு நடைமுறை மிகவும் மெதுவான நிலையிலேயே உள்ளதுடன் காணியில் போதிய பகுதி சுவீகரிக்கப்படும் வரையில் எமது மத்திய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட வேண்டி உள்ளன. இது முகாமைத்துவ ஆற்றஇது முகாமைத்துவ ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும்.

முகாமைத்துவம் இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கான மூலோபாயங்களை ஏற்கனவே திட்டமிட்டுள்ளது. புதிய முதலீடுகளிற்கு நிதியீட்டுவது எமது இலட்சியப் பாதையில் எதிர்கொள்ளும் இன்னுமோர் சிக்கலாகும். பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளுக்கு உரிய காணிகளின் உரிமை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனிக்கு உரித்தற்ற நிலையில் பெரும்பாலான வங்கிகள் பெருமளவு சொத்துக்களை ஈடாகக் கேட்கின்றன. எவ்வாறாயினும், திறைசேரியினதும் அமைச்சினதும் உதவியுடன் குறித்த நிதியை ஒழுங்குபடுத்தும் நடைமுறையில் நாம் செயற்படுகின்றோம்.

பெல்வத்தையில் உள்ள தகவல் தொழில்நுட்ப முறை, தற்போதைய செயற்பாட்டு இயக்கத்தின் தகவல்களையும் வரலாற்றுத் தகவல்களையும் கொண்டுள்ள அதேவேளை செவனகலவில், முன்னைய முகாமைத்துவம், ஊழியர்கள் தொடர்பான சகல பதிவேடுகளையும் எடுத்துச்சென்றுள்ளனர். ஆகையால், பணிக்கொடைக் கொடுப்பனவுகள், ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஊழியர்கள் தொடர்பான விடயங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. சேவனகல சீனிக் கம்பனியின் முன்னைய முகாமைத்துவத்திடம் இருந்து புத்தகங்களையும் பதிவேடுகளையும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

# இனிப்பான வெற்றிக்கான தெளிவான மார்க்கம்



உறுதிப்படுத்தும் செயன்முறைகள் மீதான பொறுப்புகளை செயற்படுத்தல்.

**நிதியாண்டிற்குரிய செயன்முன்னேற்றம்**

கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் அங்கீகாரம் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படும்.

கணக்காய்வுக் குழுவானது கணக்காய்வு விடயப்பரப்பு, கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் அதன் செயற்திறன் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்து மேற்பார்வை செய்கின்றது.

எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் வகையில் நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அத்துடன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயல்திறன் ஆகியவை வணிகப் பிரிவுகளின் தலைவர்கள் / கண்காணிப்பாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு சரியான நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டன.

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எல்.எஸ்.சி.பி.எல் இன் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, முகாமைத்துவத்தின் பதில்களுடன், முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், கணக்காய்வாளர்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட திருப்தியற்ற பகுதிகளை திருத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளக கணக்காய்வுப் பிரிவால் இனங்காணப்பட்ட இரண்டு (02) வணிக பிரிவுகளின் உள்ளக கட்டுப்பாடுகளிலான பலவீனங்கள் மற்றும் தவறுகள் தலைமை நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் சி.ஓ.ஓக்களுடன் கலந்துரையாடப்பட்டன, முக்கியமான பகுதிகள் பொருத்தமான பரிந்துரைகளுடன் பணிப்பாளர் சபைக்குதகுந்த நடவடிக்கை எடுக்கும் பொருட்டு முன்னிலைப்படுத்தப்பட்டன.

உள்ளக கணக்காய்வு பிரிவு வழங்கிய சேவைகள் மற்றும் நிறுவனத்தின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கான அவர்களின் முயற்சிகள் ஆகியவற்றுக்காக கணக்காய்வுக் குழு நன்றி தெரிவிக்க விரும்புகிறது. குழுவின் அங்கத்தவர்கள் அளித்த பங்களிப்பு நன்றியுடன் பாராட்டப்படுகிறது. நிறுவனத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு நிதி விடயங்கள் தொடர்பில் அவர்களின் அனுபவம் மற்றும் திறமை ஆகியன விலைமதிப்பற்றது.

டி.வி.வீரசேன

**தலைவர் - கணக்காய்வுக் குழு**

# இனிமையான வெற்றிக்கான
# வழங்கல் நேரம்



# பணிப்பாளர்கள் சபை



தவிசாளர்
திரு.நவின் அதிகாரம



பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
திரு. எம்.எஸ்.ஏ. சத்தார்



பணிப்பாளர்
திரு. திசத் விஜயகுணவர்தன
சட்டத்தரணி



பணிப்பாளர்
திரு.ஆர்.எம்.காமினி ரத்நாயக்க



பணிப்பாளர்
திரு.வின்சன்ட் டயஸ்



பணிப்பாளர்
திரு.டி.வி.வீரசேன



பணிப்பாளர்
கலாநிதி.நிஹால் சமரப்புலி

# பணிப்பாளர்களின் சுயவிபரங்கள்

## எமது தவிசாளர் திரு.நவின் அதிகாரம

எங்கள் தவிசாளராகிய திரு.நவின் அதிகாரம அவர்கள், கம்பனி நல்லாட்சி, வியாபார நுணுக்கங்கள், அரச நிறுவனச் செயற்பாடுகள் ஆகியவற்றில் பரந்த அனுபவமும் கொண்டவராகவும், சந்தேகமற நிரூபிக்கப்பட்ட தடத்தினைப் பதித்தவராகவும் விளங்குவதுடன், தொலைநோக்கு மிக்கவராகவும் விளங்குவதுடன், தொலைநோக்குமிக்கவராகவும் வெற்றிவகை சூடிவரும் தொழில் முயற்சியாண்மையாளராகவும், இலங்கையிலும் ஐக்கிய அமெரிக்க குடியரசு, ஐக்கிய இராச்சியம் மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட உலக நாடுகளில் பல்லின சுற்றாடல்களில், அமையப்பெற்ற 500 கம்பனிகளில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ நிறைவேற்று அதிகாரியாகவும், ஏராளமான ஊசுஆ முறைமைகள் இணையத்தளம் மூலம் கட்டணம் அறவிடும் முறைமைகள் (முஊளு) ரெலிகொம் கட்டணம் அறவிடும் முறைமைகள் மற்றும் ளுனீ மற்றும் ஏயுளு ஆகிய முறைமைகளை நடைமுறைப்படுத்தும், கொடுப்பனவுக்குப் பிந்திய பல் பரிமானங்களிலான சேவைகளிலும் ஆழந்த பரிச்சயமுயைவராவார் அவர் பின்வரும் குழுக்களில் அங்கம் வகித்து வருகின்றார்.

- தென்கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்
- கானி சீர்திருத்த ஆனைக்குழு பணிப்பாளர்
- எமது பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

## ஜனாப் மொஹமட் ஹில்மி அப்துல் சத்தார்

எமது பிரதம நிறைவேற்று அதிகாரியான ஜனாப் எம்.எச்.ஏ.சத்தார் அவர்கள், முகாமைத்துவத் துறையில் சேவையாற்றிவரும் தொழில்சார் நிபுணராவார்.

### பிரதான திறன்கள்

- முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்துறைகளில் பரந்த அறிவு
- நடைமுறை நிருவாகத்திலும், நல்லாட்சித் தத்துவங்களில் இற்றைப்படுத்தப்பட்ட அறிவு
- பயனுறுதிமிக்க எழுத்து மூலம் வாய்மொழி மூல தொடர்பாடல் அறிவு.
- ஊடக முகாமைத்துவத்தில் தேர்ச்சி

### தொழில்சார் அனுபவம

- பிரதம நிறைவேற்று அதிகாரி - லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்
- பணிப்பாளர் - பிரிமியர் வுமு20 சிங்கப்பூர்
- ஆலோசகர்
- பணிப்பாளர் - வீடமைப்பு, நிர்மானத்துறை அமைச்சு.
- கௌரவ ஆலோசகர் - அரச வர்த்த அமைச்சு (2002-2004)
- பங்காளர்: வுமுளு ட்ரேடிங், கொழும்பு (1995-2000)
- நிறைவேற்று களஞ்சிய முகாமையாளர் (1989-1993)

## பணிப்பாளர் சபை

## திரு.திசாத் விஜய குணவர்தன

திரு. திவாத் விஜயகுணவர்த்தன அவர்கள், இங்கிலாந்தில் உள்ள சுநயனபெ பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். அவர் து.வு.ளு பவர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளராக .ஃ.ஆலோசகராகவும் சேவையாற்றி வருகின்றார் அவர் லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இன்றுவரை சேவையாற்றி வருகின்றார்.

**திரு. ஆர்.எம்.காமினி குடா பண்டார ரத்நாயக்க இளம் விஞ்ஞானமானி, முதுவிஞ்ஞானமானி MAKS**

திரு. ஆர். எம். காமினி குடா பண்டார ரத்நாயக்க அவர்கள், பேராதனைப் பல்கலைக்கழக (விவசாய சிறப்பு) பட்டதாரியாவார். தைவான் மற்றும் பிலிப்பைன்ஸில் உள்ள காணி சீர்திருத்த மற்றும் பயிற்சி நிறுவன சான்றிதழ் பெற்றவர் நெதர்லாந்தில் உள்ள வைகெனிங்கள் பல்கலைக்கழக விவசாய அறிவு முறைமை முகாமைத்துவத்தில் (ஆயுமுளு) முது விஞ்ஞானமானி பட்டம் பெற்றவர். அத்துடன் ஆசியா மற்றும் பசுபிக்கான ஒருமுகப்படுத்தப்பட்ட மத்திய நிலையம் மற்றும் இந்தியாவில் உள்ள கிராமிய அபிவிருத்தி தேசிய நிறுவகம் ஆகியவற்றின் கூட்டு ஏற்பாட்டில் அசாமில் மாநிலத்தின் குவாஹெட்டியில் உள்ள வரட்சிப் பிரதேசங்களை மையப்படுத்தி நதிமூலப் பகுதிய பயிற்சி சான்றிதழ்.

**திரு. டொன் வின்சன்ட் டயஸ்- முன்னாள் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்**

திரு. டொன் வின்சன்ட் டயஸ் அவர்கள் முகாமைத்துவத்தில் ஒரு வாண்மையாளராவார்.

**அனுபவம**

- 1975 - பதுளை தொகுதி ஐ.தே.க அமைப்பாளர்
- 1977 - பதுளை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்
- 1983 - பிராந்திய அபிவிருத்தி - பிரதி அமைச்சர்
- 1993 - 1994 - சுயாதீன தொலைக்காட்சி பணிப்பாளர்
- 1994 - தலைவர் / மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
- 1993 - 2009 - ஊவா மாகாண சபை உறுப்பினர்
- 2015 - பணிப்பாளர் - லங்கா சீனிக் கம்பனி மற்றும் லங்கா சலுசல (சிறப்பு)

**திரு.டி.வி. வீரசேன - இளம வர்த்தக மாணி ((டீ-உ ழுஅ ளிநஉ யைட) கணக்கீட்டு மற்றும் நிதிசார் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா**

**தொழில்சார் தராதரங்கள்**

- இலங்கை அரச நிதிசார் கணக்காளர்கள் சங்கத்தின் இலங்கை கணக்காளர்கள் சேவை உறுப்பினர்
- கணக்கீட்டில் உயர் தேசிய டிப்ளோமா - தொழில்நுட்பக் கல்லூரி
- அரச நிதிசார் முகாமைத்துவத்தில் டிப்ளோமா - ளுடுஜனுயு
- பட்டயக் கணக்காளர்
- தொழில்சார் ஆங்கிலத்தில் டிப்ளோமா - ளுடுஜனுயு
- வியாபாரக் கற்கைகளில் டிப்ளோமா - தொழில்நுட்பக் கல்லூரி

**கலாநிதி நிஹால் சமரப்புலி - டீ.ளுஉ (விவசாயத்தில் சிறப்பு) ஆ.ளுஉ (விவசாய விரிவாக்கல்), கலாநிதிப் பட்டம் (பொருளியல்)**

கலாநிதி நிஹால் சமரப்புலி அவர்கள், அரச மற்றும் தனியார் துறை ஸ்தாபனங்களில் 35 வருடங்களுக்கு மேலான வேலை அனுபவம் கொண்டுள்ள பொருளியலாளராவார். இவர் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.முகவரமைப்பான விவசாய அபிவிருத்திக்கான நிறுவனம் சார் நிதியம் போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கான ஆலோசகராகவும் கடமையாற்றினார். இவர் பல்வேறு துறைகளில் 300க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தும், வெளியிட்டுள்ளதுடன் இவர் அபிவிருத்தி, கொள்கைப் பகுப்பாய்வு, முதலீடு குறித்த பேச்சு வார்த்தை நடத்தல் ஆகிய துறைகளில் விசேட நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

**தொழில்சார் அனுபவம்**

- டோக்கியோ சீமேந்து கம்பனி - கொழும்பு -03 (பணிப்பாளர்- பொருளாதார ஆராய்ச்சி) 2015
- முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு - 2013 -2014
- இலங்கை முதலீட்டு சபை - பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் கொள்கை வகுப்பு) 2001 - 2014
- இலங்கை முதலீட்டு சபை - 1998 - 2001
- இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், அகலவத்தை (விவசாயப் பொருளியலாளர்) 1991 - 1998
- இறப்பர் ஆராய்ச்சி சபை, மத்துகம- (பயிற்சி அலுவலர்) 1981-1991
- மகாவலி அபிவிருத்தி சபை (மண் இரசாயனவியலாளர்) 1979 - 1981

# சிரேட முகாமையாளர் குழு மற்றும் தலைமை அலுவலக நிறுவகக் கட்டமைப்பு



**தவிசாளர்**
திரு.நவின் அதிகாரம



**பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி**
திரு. எம்.எஸ்.ஏ. சத்தார்



**சீஓஓ – பெல்வத்த**
திரு. பீ.எச்.ஏ.டபிள்யூ. கருணாரத்ன



**சிஓஓ – செவனகல**
திரு அமுனுகம



**ஜிஎம் - பொருள் கொள்வனவு**
திரு டபில்யு எம் கருணாரத்ன



**ஜிஎம் - பொருள் கொள்வனவு**
என் எச நவரத்ன




**ஜிஎம் - பொருள் கொள்வனவு**
திரு எத ஜயகொடி



**முத்த மேலாளர் நில ஆக்கிரமிப்பு**
திரு சஹதேவ

# நிறுவனக் கட்டமைப்பு - பெல்வத்தை



# பெல்வத்தை முகாமைத்துவக் குழு




**முதல்வரிசை (இடமிருந்து வலமாக)**

திருமதி எம்.ஈ.கொஸ்கஹகும்குர (முகாமைத்துவக் கணக்காளர்) திரு.டி.என்.தயாரத்ன (பிரதி முகாமையாளர் தொழிற்சாலை) திருமதி.எம்.பி.என்.இலங்கக்கோன்(பிரதி முகாமையாளர் தொழிற்பாடுகள்) திரு.விமல் கருணாரத்ன (பிரதம செயற்பாட்டு அதிகாரி), திரு.டி.எல்.டி.ஜயந்த (பொது முகாமையாளர் -வடிசாலை), திரு.எம்.எம்.டி.எஸ்.என்.பெரேரா(பிரதி பொது முகாமையாளர் - விவசாயம்) திருமதி.லில்லி எம் ஹெட்டியாராய்சி (நிறைவேற்று கூட்டாண்மைத் தகவல்)


**இரண்டாவது வரிசை (இடமிருந்து வலமாக)**

திரு.எஸ்.வீரசேகர (முகாமையாளர் (குழிப்பந்து விளையாட்டுரு கூடுமிடம்) திரு.ஆர்.எம்.ஜே.பண்டார (உற்பத்தி முகாமையாளர் - வடிசாலை), திரு.டி.ஜே.சந்தரராஜ் (மின்விசைப் பொறியியலாளர் தொழிற்சாலை), திரு.கே.எல்.ஜே.பொன்னான்டோ (முகாமையாளர் - மனிதவளம்), திரு.எச்.எம்.ஐ.ஏ.கே.கட்டுகஹ (உற்பத்தி முகாமையாளர் - தொழிற்சாலை), திரு.கே.விதுரசிங்க (முகாமையாளர் - அறுவடை ரு கொள்வனவு நிலையம்), திரு.என்.விமலசேன (பிரதம விசாரணை அதிகாரி) திரு.மலிந்த த சில்வா (உதவிப் பொது முகாமையாளர் - மனிதவளம் ரு நிருவாகம்)

**மூன்றாவது வரிசை (இடமிருந்து வலமாக )**

திரு.எல்.ஏ.சி.பிரசன்ன (முகாமையாளர் - நே)இ திரு. கே.ஏ.ஜீ.எஸ்.சிசிவத் (பொறியியல் முகாமையாளர் தொழிற்சாலை), திரு.டபிள்யூ.எஸ்.கே.ரத்நாயக்க (முகாமையாளர் - காணி அபிவிருத்தி), திரு.டி.எம்.எஸ்.பண்டார (முகாமையாளர் - தொழிற்சாலை), திரு.ஏ.சமாச்சி (பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்), திரு.ஆர்.ஏ.எம்.சந்தன (விவசாயப் பொருளியியலாளர்), திரு.அநுர விஜேசிங்க (முகாமையாளர் - பெருந்தோட்ட தீர்வுகள்), திரு.எம்.பீ.சந்தன (பிரதம பொறியியலாளர் விவசாய செயலமர்வு)

# நிறுவனத்தின் கட்டமைப்பு



# செவனகல முகாமைத்துவக் குழு



**இடமிருந்து வலகமாக அமர்ந்திருப்போர்**

திரு.என்.ஏ.விமலரத்ன (பதில் முகாமையாளர் - உபகரணங்கள்) திரு.ஜே.ஆர்.மலால்கொட (உதவிப் பொது முகாமையாளர் - குடிசார் பொறியியல் சேவைகள்) திரு.டி.கே.டபிள்யூ சில்வா (பிரதி பொது முகாமையாளர்- தொழிற்சாலை) திரு.சீ.ஈ.அமுனுகம (பிரதம செயற்பாடுகள் அதிகாரி) திரு.கே.ர.வோல்டர் (பொது முகாமையாளர்) திரு.எச்.எம்.எஸ்.சமரவீர (பிரதி பொது முகாமையாளர் - விவசாயம்) எஸ்.வி.டி.எஸ்.பிரியந்த (பிரதம பொறியியலாளர்)

**வலமிருந்து இடமாக நிற்போர்**

திரு.எஸ்.டபிளியூ.கொடித்துவக்கு (முகாமையாளர்- விவசாய விரிவாக்கம்) திரு.பீ.ஏ.கெ.நந்ததேவ (முகாமையாளர் - விவசாய விரிவாக்கல்), திரு.எம்.உபுல் குமார (முகாமையாளர் - விவசாய விரிவாக்கம்) திரு.அதுல சிரிதேவ (முகாமையாளர் - விவசாய விரிவாக்கல்), திரு.டீ.சி.ஹெட்டியாராச்சி (பிரதம பொறியியலாளர் - மின்சக்தி ரூ செயலமர்வு) திரு.ஜயந்த பொன்னான்டோ (சிரேட முகாமையாளர் மனிதவளம்) திரு.சப்புமால் பிஹிலகெதர (முகாமையாளர் - பெறுகை ரூ சந்தைப்படுத்தல்) திரு.எம்.சாந்த வீரசிறி (உள்ளக கணக்காய்வாளர் விசாரணை அத்தியட்சகர்), திரு.கிங்ஸ்லி பத்திரன (சிரேட கணக்காளர்

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 கம்பனியின் தாபிப்பு மற்றும் உரித்து

வரையறுக்கப்பட்ட லங்கா சீனிக் கம்பனியானது பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் மீளப் பதிவுசெய்யப்பட்டது. இது முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியொன்றானதுடன் திறைசேரிச் செயலாளர் கம்பனியின் தனியான பங்குதாரராகவுள்ளார்.

## 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (சபை) பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை

வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி / இ.நி.அ.நி)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இ.க.நி 10 – அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னரான நிகழ்வுகள்**

நிதிக்கூற்றுக்கள் வெளியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட திகதியில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனி இதனுடன் இணங்கியிருக்கவில்லை.

**(ஆ) இ.க.நி 24 – தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்**

தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இ.க.நி 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

நியமத்தின் பிரகாரம், நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் உள்ளவாறான நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற்கெள்வதன் மூலம் நிதழத்தக்க பொறுப்புக்களிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது இதனுடன் இணங்கியிருக்கவில்லை. மேலும், காணப்படுகின்ற நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக சட்டத்தரணிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்களை சமர்ப்பிப்பதற்குத் தவறியிருந்தது.

**(ஈ) இ.க.நி 39 – நிதிக்கருவிகளை இனங்காணல் மற்றும் அளவிடுதல்**

நியமத்தின் 09 (ii), 46 (அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம், பதவியணியினர் கடன்கள் மீதிகள், மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் நிதிக்கூற்றுக்களில் செயற்திறனான வட்டி முறையின் கீழ் சீராக்குவதன் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. மேலும், கால முதிர்ச்சித் திகதியில் வைத்திருக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் செயற்திறனான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் கணிப்பிடுவதன் மூலம் நிதிக்கூற்றுக்களில் "முதிர்ச்சிக்காக உள்ளது" இன் கீழ் வகைப்படுத்தப்பட்டு இனங்காணப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனி இவற்றுடன் இணங்கியிருக்கவில்லை. அதேநேரம், நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 910,838,300 தொகையான வைப்புக்கள் நியமத்தின் 9 மற்றும் 45 ஆம் பந்திகளின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு அளவிடப்பட்டிருக்கவில்லை.

**(உ) இ.க.நி 41 – விவசாயம்**

உயிரியல் மாற்றமானது நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் உயிரியல் சொத்துக்களாக இனங்காணப்பட்டு காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 624,198,372 பெறுமதியான உயிரியல் சொத்து கம்பனியால் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உயிரியல் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. உயிரியல் சொத்துக்கள் நியமப் பெறுமதியில் கணக்குகளில் கணிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் கரும்பு விவசாயத்தில் ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் கணக்குகளில் உயிரியல் சொத்துக்களாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

**(ஊ) இ.நி.அ.நி 07 – நிதிக்கருவிகளை வெளிப்படுத்தல்**

நட்டக்கழிவு ஏற்பாடுகள், ஐயக் கடன்களுக்கான ஒப்பிடுகை தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் சொத்துக்களிலிருந்து நேரடியாக கழிக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து பெறவேண்டிய கடன்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(எ) **இ.நி.அ.நி. 08 – செயற்பாட்டுப் பிரிவுகள்**

அறிக்கையிடக்கூடிய பிரிவுகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் நியமத்தின் 22 மற்றும் 28 ஆம் பந்திகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான செவனகல சீனி தொழிற்சாலையின் நிலையான சொத்துப் பதிவேட்டில் ரூபா 14,170 எதிர்மறைப் பெறுமதியுடைய சொத்தொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனிக்கு சொந்தமான பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட காணி அபிவிருத்திகளை பெறுமானத்தேய்வு செய்வதில் கம்பனியின் கொள்கையானது வருடாந்தம் இரண்டு சதவீதமாக இருந்த போதிலும் மஹாவெவ செயற்திட்டத்தின் ரூபா 8,384,151 மதிப்புடைய காணி அபிவிருத்திகள் வருடாந்தம் நான்கு சதவீதப்படி பெறுமானத்தேய்விடப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கம்பனிக்குச் சொந்தமான பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 760,763,929 மீதியானது கொள்வனவுத் திகதியை கருத்திற்கொள்வதற்குப் பதிலாக முழு ஆண்டிற்குமான பெறுமானத்தேய்வுகள் சீரக்கம் செய்யப்பட்டிருந்தன.

(ஈ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் 08 குத்தகை உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய ரூபா 19,038,439 தொகையான செலுத்த வேண்டிய வட்டிகள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) இருப்பு உருப்படிகளிற்கான வயதுப் பகுப்பாய்வு வழக்கற்றுப்போன இருப்புக்களிற்கான ஏற்பாடுகளை இனங்காண்பதற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை அதேநேரம் கம்பனிக்குச் சொந்தமான செவனகல சீனித் தொழிற்சாலையின் ஐந்து இருப்பு உருப்படிகள் ரூபா 36,435,394 எதிர்மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தன.

(ஊ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் விற்பனைக் கிரயம் "பெறுமதி மதிப்பீட்டுச் சீராக்கங்கள்" ஆக ரூபா 1,847,711 ஐ கழித்து ரூபா 4,813,390 ஐ சேர்ப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால், முறையான கிரயக் கணக்கீட்டு நுட்பங்களைப் பின்பற்றாமல் கணிப்பிடப்பட்டிருந்த ரூபா 3,710,632,390 தொகையான பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் மொத்த விற்பனைக் கிரயத்தின் சரியானதன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(எ) முன்னைய முகாமைத்துவத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலையின் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட சொத்துக்களிலிருந்து இனங்காணப்பட முடியாதிருந்ததுடன்

இந்தச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததனால் அவை நியாயப்பெறுமதியில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வரிக் கணிப்பீடுகள் 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இனங்காணப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான செவனகல சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பொறி மற்றும் இயந்திரத்தின் தேறிய மீதி ரூபா 440,242,580 ஆக இருந்த போதிலும் பட்டியலின் பிரகாரம் அது ரூபா 430,194,601 ஆக இருந்தமையால் ரூபா 10,047,979 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஆ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 442,730 மற்றும் ரூபா 442,924 கிரயமான முறையே களப் பொறி மற்றும் உபகரணம் மற்றும் வாகனங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்ட கிரய மீதிகளிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன.

(இ) செவனகல மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலைகள் தொடர்பில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக தலைமை அலுவலகத்தால் எடுக்கப்பட்ட மீதிகளுக்கும் செவனகல மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலைகளால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளிற்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. அதற்கிணங்க, பெலவத்தை சீனிக் கைத்தொழிலின் 04 கணக்கு மீதிகளில் ரூபா 67,560,469 வேறுபாடும் செவனகல சீனித் தொழிற்சாலையின் ஐந்து கணக்கு மீதிகளில் ரூபா 26,435,833 வேறுபாடும் காணப்பட்டன.

(ஈ) செவனகல மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செவனகல சீனிக் கைத்தொழிலிற்கு செலுத்த வேண்டிய மீதியில் ரூபா 1,084,930 வேறுபாடு காணப்பட்ட அதேநேரம் தலைமை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய மீதியில் ரூபா 2,000,390 வேறுபாடு காணப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டவாறு தலைமை அலுவலகத்திலிருந்து பெறவேண்டிய மீதிகளில் ரூபா 45,596,272 ஆனவேறுபாடும் காணப்பட்டது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 2.2.4.1 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த 1987 இலிருந்து கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 592,930,256 நீண்டகால நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெலவத்தை சீனித் தொழிற்சாலையின்

நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டவாறு 2012 இலிருந்து முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 2,564,708 மீதிகளுடன் சேர்த்து பதவியணியினர் கழகத்திலிருந்து பெறவேண்டியிருந்த பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் 2012 இலிருந்து வியாபாரம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 1,578,177 நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனிக்குச் சொந்தமான பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவு மீதிகள் 2013/2014 இல் விநியோகஸ்தருக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,348,314 மீதியை உள்ளடக்கியிருந்ததுடன் கம்பனி அந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(இ) காலப்பகுப்பாய்வு ஊடாக அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செவனகல சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட விவசாயிகளிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 319,114,107 மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 50,225 தொகையான கடன்பட்டோர் கணக்குகளிலுள்ள செலவு மீதி தீர்ப்பனவு செய்யப்படாது பெலவத்தை சீனித் தொழிற்சாலையுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் 2013 தொடக்கம் 2015 வரையான ரூபா 26,304,842 ஆன வழிச்சரக்குகளை உள்ளடக்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரையிலும் இந்த மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்கத்தால் சுவீகரிப்புச் செய்யப்பட்ட காலத்திற்கு முன்னர் முன்னைய முகாமைத்துவத்தால் விவசாயிகளிற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் கணக்கீடுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது செவனகல சீனித் தொழிற்சாலையால் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4.2 செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்கொடுத்தோருக்குச் செலுத்தவேண்டிய ரூபா 67,403,708 தொகை 2011 இலிருந்து பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கம்பனி அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 3,972,068 மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஒரு வருடத்திற்கு மேலாக எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவாக பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 13,658,977 தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மீதான மேலதிகக் கட்டணம் பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளில் 2011 இலிருந்து உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 56,999 மற்றும் ரூபா 2,225,407 தொகையான முறையே பதவியணியினர் மற்றும் விவசாயிகளிற்குச் செலுத்தவேண்டிய ஊக்குவிப்புக்களும் அந்த மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் லங்கா சதோசவிற்கு செலுத்தவேண்டிய ரூபா 8,086,000 மீதியானது 2013 இலிருந்து இந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா 4,074,921 கூட்டுத்தொகையான கோரப்படாத வேதனங்கள் தவறான நடவடிக்கைக்கு வழிவகுக்கும் என்பதால் குறுகிய காலப்பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் இந்த மீதிகள் ஒரு ஆண்டிற்கு மேலாக கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

(ஊ) செவனகல சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் ஒரு ஆண்டிற்கு மேலாக நானாவித கடன்கொடுத்தோர்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 152,132 மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியானது நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(எ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையுடன் தொடர்புடைய ரூபா 160,442,120 தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) மீதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நானாவித கடன்கொடுத்தோர்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஏ) விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட ரூபா 59,822,499 பழைய கடன் மீதியானது செவனகல சீனிக் கைத்தொழிலின் நிதிக்கூற்றுக்களில் நானாவித கடன்கொடுத்தோர்களாக தவறுதலாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.5 கணக்காய்விற்குச் சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு கணக்கு விடயங்களிற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயங்கள் | தொகை | சான்று சமர்ப்பிக்கப்படாமை |
|---|---|---|
| | ரூபா | |
| ஹோட்டல் செயற்திட்ட மீதி - பெலவத்தை சீனித் தொழிற்சாலை | 74,821,594 | தொகைகளை சரிபார்ப்பதற்கான ஆதார ஆவணங்கள் |
| அகற்றப்பட்ட களப் பொறி மற்றும் உபகரணம் (Field plant and equipment) - பெலவத்தை சீனித் தொழிற்சாலை | 210,000 | |
| நடைமுறை ஆண்டுச் சீராக்கங்கள் | 4,170,957 | |
| வங்கிக்குச் செலுத்த வேண்டிய குத்தகை | 11,812,500 | வங்கி உறுதிப்படுத்தல்கள் |

(ஆ) 2011 இன் 43 ஆம் இலக்க குறைச்செயலாற்றலுடைய தொழில்முயற்சிகள் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களை புதுப்பித்தல் அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கம்பனிக்கு மாற்றஞ்செய்யப்பட்ட சொத்துக்களின் பட்டியல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| I. 9.2 (ஈ) பந்தி | ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் என்பன பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட வேண்டிய போதும் கம்பனியின் தலைமை அலுவலகமும் பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளும் இதனுடன் இணங்கியிருக்கவில்லை. |
| II. 5.2.5 ஆம் பந்தி | கம்பனியின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி நாளதுவரையாக்கப்பட்ட பாதீட்டின் பிரதியொன்று வருடம் ஆரம்பித்து 15 நாட்கள் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய |

போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான அத்தகைய பாதிடப்பட்ட மதிப்பீடுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

III. 6.5.1 ஆம் பந்தி

நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியானது மீளாய்வாண்டிற்கான அதன் நிதிக்கூற்றுக்களை 5 மாதங்களும் 20 நாட்களும் தாமதித்ததன் பின்னர் சமர்ப்பித்திருந்தது.

(ஆ) 2008 யூன் 26 மற்றும் 1999 ஒக்தோபர் 08 இன் முறையே 14/2008 மற்றும் 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் மற்றும் 2015 மே 25 இன் பிஈடி/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை

I. பொருத்தமான பதவிக்கு உரித்துள்ள ரூபா 30,000 மாதாந்த போக்குவரத்துப் படி மற்றும் மாதாந்த எரிபொருள் படி என்பன தனிப்பட்ட பாவனைக்கு அலுவலக வாகனத்தை கொண்டிருப்பதற்கு உரித்துள்ள அலுவலர்களுக்கு செலுத்த முடிந்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச்செய்யப்பட்ட 04 அலுவலர்களிற்காக ரூபா 240,000 தொகை மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையிலுள்ள 8 அலுவலர்களிற்காக ரூபா 838,000 தொகை என்பன சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாகவும் அவ்வாறே பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

II. போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளைப் பெறுகின்ற அலுவலர்கள் சாரதியை அல்லது சாரதிக்கான படியை பெறுவதற்கு உரித்தற்றவர்களாகவுள்ள போதிலும் நிரந்தரப் பதவியணியிலுள்ள சாரதியை பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) வேலைக்கமர்த்தியிருந்ததுடன் கம்பனியால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 488,542 சம்பளம் அந்த சாரதிக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முகாமைத்துவ மட்ட அலுவலரிற்கு ஒதுக்கப்பட்டிருந்த யாலபோவ வீடமைப்புத் திட்டத்திலுள்ள வதிவிடம் அந்த சாரதிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

தேசிய சூழல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செவனகல சீனித் தொழிற்சாலையால் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஈ) | 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 மற்றும் 3.2.1 ஆம் வழிகாட்டிகள் | பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் ரூபா 128,910,000 கிரயத்தில் கிரேன் (Crane) கொள்வனவு செய்வதற்காக அமைச்சுக் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் தேசிய போட்டிக் கேள்விகள் கோரப்படுவதற்குப் பதிலாக சந்தை விலை குறிப்பிடல் முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. |
| | 3.2.1 ஆம் வழிகாட்டி | செவனகல சீனித் தொழிற்சாலையால் ரூபா 17,400,000 கிரயத்தில் கிரேனை (Crane) கொள்வனவு செய்வதற்காக திணைக்கள கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | 3.4.1 (அ) மற்றும் 7.12.2 (அ) வழிகாட்டிகள் | குறைந்த பெறுமதி மற்றும் அவசரத் தேவைப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது சந்தை விலைக் குறிப்பிடல் முறை பின்பற்றப்பட வேண்டியிருந்த போதும் செவனகல சீனித் தொழிற்சாலையால் ரூபா 11,872,000 மதிப்புடைய இரண்டு சாப்ற் மவுண்ட் கியர் பெட்டிகளைக் (Shaft Mount Gear Box) கொள்வனவு செய்வதற்கு இந்த முறை பயன்படுத்தப்பட்டிருந்தது. |

### 2.2.7 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல், செவனகல சீனித் தொழிற்சாலை, கம்பனியின் தலைமை அலுவலகம் மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலை என்பவற்றின் உயர் முகாமைத்துவ பதவியணியினர் கம்பனியின் பிரதம நிறைவேற்று அலுவலரின் அங்கீகாரத்தை அடிப்படையாகக்கொண்டு முறையே ரூபா 1,920,000, ரூபா 1,560,000 மற்றும் ரூபா 22,537,806 தொகையான பல்வேறு படிகள் பெறப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஆகஸ்ட் 24 இல் தீர்மானிக்கப்பட்ட விலைகளை விட குறைவான எதனோல் விற்பனைகள் பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளில் முறையே ரூபா 31,218,000 மற்றும் ரூபா 15,000,000 நட்டம் உள்ளடங்கலாக ரூபா 46,218,000 மொத்த நட்டத்திற்கு காரணமாயிருந்தது. மேலும், எதனோலிற்கான நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அந்தக் காலப்பகுதியின் போது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் எதனோலை விற்பனை செய்வதற்கு பல விலைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(இ) ரூபா 4,002,360 மற்றும் ரூபா 6,665,725 தொகை முறையே பதுளை மற்றும் கந்தளாய் செயற்திட்டங்களின் செலவினத்தை ஈடுசெய்வதற்காக செலவிடுவதற்கு முறையான அனுமதியில்லாமல் தலைமை அலுவலகத்தால் செவனகல சீனித் தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்டிருந்தது.

(ஈ) 2014 இல் செவனகல சீனித் தொழிற்சாலையிலிருந்து காசை எடுப்பதன் மூலம் தனியார் வங்கியொன்றின் நிலையான வைப்புக் கணக்கில் ரூபா 26,462,500 தொகை வைப்பிலிடப்பட்டிருந்தது. 2016 மார்ச் 13 இல் முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் பணம் மீளப்பெறப்பட்டிருந்தமையால் ரூபா 870,000 வட்டி நட்டமடைந்திருந்தது.

(உ) செவனகல சீனித் தொழிற்சாலையிலிருந்து தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 10,600,000 தொகையான பணத்திலிருந்து ரூபா 10,048,000 கிரயமான வாகனமொன்று பிரதம நிறைவேற்று அலுவலரிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த பணத்தை மாற்றுவதற்கோ அல்லது வாகனத்தை கொள்வனவு செய்வதற்கோ அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 211,012,935 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 1,052,439,824 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 841,426,889 ஆன மேலுமொரு வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு வருமானம் ரூபா 657,667,601 தொகையால் குறைவடைந்தமை மற்றும் விற்பனைக் கிரயம் ரூபா 160,665,253 ஆல் அதிகரித்தமை என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.2 கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை

மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டம் ரூபா 1,067.3 மில்லியனாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கான கம்பனியின் பங்களிப்பு ரூபா 1,305.6 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகள் காலப்பகுதியில் நாட்டிற்கான கம்பனியின் பங்களிப்பு பின்வருமாறுள்ளது.

| விபரம் | 2015 | 2014 | 2013 | 2012 (கடந்த 03 மாதங்கள்) |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | (1,067,300,530) | (150,836,960) | 816,828,301 | (174,323,817) |
| கூட்டு:- பதவியணியினர் வேதனங்கள் | 2,092,819,358 | 1,658,235,775 | 1,540,551,175 | 1,414,038,931 |
| அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிகள் | (14,860,706) | 60,175,975 | - | - |
| பெறுமானத்தேய்வு | 294,951,968 | 268,727,657 | 199,837,040 | 46,752,626 |
| பெறுமதிச் சேர்க்கை | 1,305,610,090 | 1,836,302,447 | 2,557,216,516 | 1,286,467,740 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கம்பனியின் மொத்தப் பதவியணியினர் வேதனங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 434,583,583 ஆல் அதிகரித்திருந்தது.

### 3.3 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் முக்கிய சில விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1:1.8 | 1:2.25 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:1.7 | 1:1.55 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கம்பனியானது 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு நிலையான வைப்புக்களில் முறையே ரூபா 910.84 மில்லியன் மற்றும் ரூபா 1,733.87 மில்லியன் தொகையை முதலிட்டதுடன் கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களில் இந்த முதலீடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதனால் கம்பனியின் திரவத்தன்மை நிலை திருப்திகரமான மட்டத்திலிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கரும்புகளைப் பிழிவதற்காக அவசரத் தேவைகளாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,872,000 பெறுமதியான இரண்டு சாப்ற் மவுண்டட் கியர் பெட்டிகள் (Shaft Mounted Gear Boxes) 2014 மே 24 இல் பிரதான களஞ்சியங்களிற்காக பெறப்பட்டிருந்தன. எனினும், இவை 2015 திசெம்பர் மாதத்தில் உற்பத்திக்கூடத்தில் நிறுவப்பட்டிருந்தன. மேலும், கரும்புகளைப் பிழிதல் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கரும்புகளைப் பிழிகின்ற முதல் நாளிலேயே இயந்திரம் பழுதடைந்தது.

**(ஆ) கரும்புகளை இறக்குதல் முறைமைகளின் கொள்வனவு**

(i) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் பயன்பாட்டிற்காக ரூபா 128,910,000 கிரயத்தில் கரும்பு அகற்றும் முறைமையொன்று (Cane Unloading System) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது முறையாக நிறுவப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, சீனித்

தொழிற்சாலையிலுள்ள பழைய கிரேன் ரூபா 61,333,644 தொகை செலவிடப்பட்டு நிறுவப்பட்டிருந்தது.

(ii) செவனகல சீனித் தொழிற்சாலையால் ரூபா 17,400,000 கிரயத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு கரும்பு இறக்குதல் முறைமைகள் 2015 யூன் 25 அளவில் வேலைசெய்யும் நிலைமையில் இருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 1,809,600 தொகையான இறுதிக் கொடுப்பனவு கம்பனியால் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் 2015 நவம்பர் 27 இல் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கம்பனிக்கு சொந்தமான செவனகல சீனித் தொழிற்சாலையின் கொள்வனவாளர்களுக்கு எதனோலை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட காற்றை விடுவிக்கும் அலைகளுடனான ஒரு மதுபான ஓட்டமானி (Alcohol Flow Meter - Neptune) 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,951,019 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஓட்டமானி சரியான அளவீட்டுத் தரவை வழங்கவில்லை.

(ஈ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நூற்றியிருபத்தொரு வாகனங்கள், பொறி மற்றும் உபகரணம் திருத்துவதற்காக அதன் சொந்த விவசாய வேலைத்தளத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வாகனங்களைத் திருத்துவதிலுள்ள காலதாமதம் காரணமாக விளைவற்றிருந்தன. மேலும், கம்பனியால் அவற்றைத் திருத்துவதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 திசெம்பரின் போது திருத்துவதற்காக வழங்கப்பட்ட 13 உழவு இயந்திரங்கள், 3 றொபின் பம்பிகள், லொறி மற்றும் கெப் என்பன 2014 இறுதிவரை திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் காணப்பட்டன.

(ஊ) 2014 மே அளவில் ரூபா 27,067,812 இற்கு கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறி நிர்மாணித்தைப் பூர்த்திசெய்வதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 31 வரையிலும் இது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால், கைத்தொழிலுக்குத் தேவைப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(எ) 21 விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குக் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 15 மதிப்பிடப்பட்ட நட்டங்களுக்கான விலைப்பட்டியல்களை சமர்ப்பிப்பதன் மூலம் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து கோரப்பட்டிருக்கவில்லை. மேலும் திருத்தும் நோக்கத்திற்காக விவசாய வேலைத்தளத்திற்கு அனுப்பப்பட்ட வாகனங்கள் வேலைத்தளத்திலுள்ள தாமதங்களால் திருத்தாமல் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன.

(ஏ) முகாமையாளர்களின் வீடமைப்புத் திட்டத்திலுள்ள 04 வீடுகள் மற்றும் நகர அபிவிருத்திப் பிரிவின் மேற்பார்வையின் கீழுள்ள 131 வீடுகள் திருத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட போதும் திருத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவற்றில் 12 வீடுகள் 10 வருடங்களிற்கு மேலாக திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பெலவத்தை சீனித் தொழிற்சாலை மற்றும் இலங்கை வங்கி பெலவத்தைக் கிளை என்பவற்றிற்கு இணைப்புச்செய்யப்பட்ட 07 அலுவலர்களிடமிருந்து வாடகையை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஒ) பெலவத்தை சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 132 றெயிலர்கள், பவுசர்கள், கிரேன்கள், லோடர்கள், எக்ஸ்கவேட்டர்கள் கம்பனியால் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) கரும்பு விவசாயத்திற்காக செவனகல சீனித் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட காணி 4,198.41 ஹெக்டெயர்களாகும். எவ்வாறாயினும், அதில் 281.51 ஹெக்டெயர்கள் ஏனைய பயிர்கள் பயிரிடப்பட்டிருந்ததுடன் 27.55 ஹெக்டெயர்கள் அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஔ) 469.87 ஹெக்டெயர்கள் பரப்பளவுடைய காணி 99 வருடங்கள் குத்தகை அடிப்படையில் இலங்கை மகாவலி அதிகாரசபையால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த போதும் குத்தகை உடன்படிக்கை கம்பனியில் கிடைக்கக்கூடியதாகவிருக்கவில்லை. ஆகையால், அதிகாரமளிக்கப்படாத அத்துமீறல்களுக்கெதிராக கம்பனி சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கமுடியாதிருந்தது.

(க) செவனகல சீனித் தொழிற்சாலையின் 57 விடுதிகள் அதிகாரமளிக்கப்படாத தரப்பினர்களால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 26 இல்லங்கள் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமையால் வசிப்பதற்குப் பொருத்தமற்றிருந்தன. இது தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய படிமுறைகளை கருத்தில்கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) கம்பனியின் எரிபொருள் கொள்கலனொன்று விபத்துக் காரணமாக சேதமடைந்திருந்தது. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி பெறப்பட்டிருக்காததால் ரூபா 906,972 சேதத்தை கம்பனி தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

(கி) ரூபா 2,218,134 தொகை செவனகல சீனிக் கைத்தொழிலால் சம்பளங்களாக 04 சந்தர்ப்பங்களில் ஹிங்குரான சீனிக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் ஹிங்குரான சீனிக் கைத்தொழிலின் கணக்குகளில் சம்பளங்களாக ரூபா 1,115,789 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) 2014 ஆம் ஆண்டில் கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீள ஸ்தாபிப்பதற்காக, ரூபா 7,446,704 தொகை செயற்திட்டமொன்றிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் கரும்பு விவசாயத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,331,000 தொகையும் கந்தளாயிலுள்ள புதிய அலுவலகத்திற்கான காணி அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 1,463,153 தொகையும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்த செயற்திட்டம் எவ்வித நலன்களையும் பெற்றுக்கொள்ளாமல் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் கரும்புகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) கம்பனி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை ஸ்தாபித்திருந்த போதும் விசேட கணக்காய்வை மேற்கொள்வதற்கு மூன்று வெளிநபர்களை உள்ளடக்கிய குழுவொன்றிற்காக ரூபா 150,000 தொகையை செலவிட்டிருந்தது.

(கூ) பெலவத்தை சீனித் தொழிற்சாலை வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை திருத்துவதற்கு விவசாய பட்டறைகளை பேணியிருந்த போதும் 11 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் 2014 நவம்பர் தொடக்கம் 2016 மார்ச் வரையான காலப்பகுதியின் போது வெளித்தரப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

(கெ) பதுளை மாவட்டத்திலுள்ள 9 பிரதேச செயலகங்களிற்குச் சொந்தமான 791 ஹெக்டெயர்கள் பரப்பளவுடைய காணிகள் கரும்புகள் பயிரிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 6 பிரதேச செயலகங்களிலுள்ள 60.6 ஹெக்டெயர்களில் மாத்திரம் கரும்புகள் பயிரிடப்பட்டிருந்தன. 03 பிரதேச செயலகங்களில் கரும்புப் பயிர்ச்செய்கை தோல்வியடைந்திருந்ததுடன் கரும்புகளை பயிரிட்டதற்கு ஏற்பட்ட காரியங்களை வெளிப்படுத்தாமல் 2015 ஆகஸ்ட் 28 இல் கைவிடப்பட்டிருந்தது. ஆகையால் இதற்காக ஏற்பட்ட கிரயம் பயனற்றதாக இருந்தது.

## 4.2 செயற்பாட்டுக் நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எதனோலிலிருந்தான பங்களிப்பு சீனியை விட அதிகமாகவுள்ளது. எவ்வாறாயினும், 2013, 2014 மற்றும் 2015 இல் பயன்படுத்தப்படாத தொழிற்சாலை இயலளவு முறையே 1 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 45 சதவீதங்களால் அதிகரித்திருந்தன. ஆகையால், கம்பனியின் இலாபத்தன்மை எதனோலின் உற்பத்தி மற்றும் விற்பனையின் வீழ்ச்சி காரணமாக குறைவடைந்திருந்தது.

(ஆ) வீஏரீ (VAT) 2 கொள்கலனில் களஞ்சியப்படுத்தப்பட்ட பாவனைக்குகந்த எதனோலிற்கு 35,000 லீற்றர்கள் பாவனைக்குகந்ததல்லாத எதனோலைக் கலப்பதன் மூலம் பெலவத்தை சீனித் தொழிற்சாலைக்கு ரூபா 18,185,400 நட்டமொன்று ஏற்பட்டிருந்தமையால் 60,618 லீற்றர்கள் எதனோல் பாவனைக்குகந்ததல்லாததாக பெறப்பட்டிருந்தது. இது 2015 ஆகஸ்ட் 28 இல் உள்ளவாறு 60,731 லீற்றர்களாக இருந்ததுடன் 2015 ஒக்தோபர் 22 இல் உள்ளவாறு 113 லீற்றர்கள் பற்றாக்குறையினை விளைவித்து 60,618 லீற்றர்களாக குறைவடைந்திருந்தது.

(இ) தொழிற்சாலையிலிருந்து வடிசாராயத் தெழிற்சாலைக்கான விடுவிக்கப்பட்ட வெல்லப்பாகிற்கும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் வடிசாராயத் தொழிற்சாலையால் பெறப்பட்ட வெல்லப்பாகிற்கும் இடையே வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. ஆகையால், 751 மெற்றிக்தொன் வெல்லப்பாகு தொடர்பில் 2015 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 22,999,375 தொகை நட்டமடைந்திருந்தது.

(ஈ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் நாளாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட வீஏரீ (VAT) கொள்கலன்களில் களஞ்சியப்படுத்துவதற்கு எதனோலை அனுப்பும் நேரத்தில் அதனை அளவிடுவதற்கு நியம முறைமையொன்றை பயன்படுத்துவதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(உ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் சீனி கட்டியாகுதல் அல்லது ஏனைய காரணங்களால் பயன்படுத்தமுடியாத சீனி மீள்செய்முறைப்படுத்தப்பட்டிருந்த

போதிலும் மீள்செய்முறைக்கு உள்ளீடு செய்த தொகையை ஆவணப்படுத்துவதற்கு சரியான முறைமை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) எதனோல் உற்பத்தியின் 143,892 லீற்றர்கள் கொள்ளளவுடனான செவனகல சீனித் தொழிற்சாலையில் வீஏரீ (VAT) 3 கொள்கலன் பலவீனமான எதனோலின் 35,642 லீற்றர்களை களஞ்சியப்படுத்தியமையால் விளைவற்றிருந்தது.

(ii) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் இறுதி இருப்புக்களின் பௌதீக மெய்மையாய்வில் எதனோலின் 5,715.28 லீற்றர்கள் மிகை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நிலைமை, உள்ளபடியான அளவு, அந்த நேரத்திலுள்ள பற்றாக்குறை, நியம விலகல் போன்றன எதனோல் இருப்புக்கள் தொடர்பில் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் முன்வைக்கப்பட்ட முறைமைகளும் கட்டுப்பாடுகளும் கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஊ) தொழிற்சாலையிலுள்ள விற்பனைகள், சந்தைப்படுத்தல், நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை வழிப்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள், கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் உள்ளடங்கலான கையேடுகள் கம்பனியில் கிடைக்ககூடியதாக இருக்கவில்லை.

(எ) பழுதடைந்த 30 வருடங்கள் பழமையான பொறி மற்றும் உபகரணங்களை மீளமைக்கவோ அல்லது திருத்துவதற்கோ முகாமைத்துவம் நடவடிக்கைகள் எடுத்திருக்காததுடன் 2014 உடன் ஒப்பிடும் போது 2015 இல் இயந்திரங்களினை நிறுவுவதன் காரணமாக தொழிற்சாலை மூடப்பட்டிருந்த மணித்தியாலங்கள் அதிகரித்திருந்ததுடன் மொத்த தொழிற்சாலை மணித்தியாலங்களில் இது 12 சதவீதமாகும்.

(ஏ) அலகு உற்பத்திக் கிரயத்தை கணிப்பிடுவதற்கு பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் முறையான கிரய கணக்கீட்டு முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் 6 ஊழியர்களிற்கு முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 1,600,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் 2015 ஆம் ஆண்டில் அதே ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 2,131,227 ஆக இருந்தது.

(ஆ) பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்பட்ட எதனோலின் ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய விற்பனை விலை முறையே ரூபா 290 மற்றும் ரூபா 350 ஆக விலைக் குழு தீர்மானித்திருந்தது. கம்பனி அதன் எதனோலை ஆகக் குறைந்த விலையை விட குறைவாக அல்லது குறைந்த விலைகளில் விற்பனை செய்திருந்தது. ஆகையால் எதனோலின் விற்பனை வருமானம் 2014 உடன் ஒப்பிடுகையில் 2015 இல் ரூபா 760,169,391 ஆல் அல்லது 32 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

மேலும், எதனோலின் 90 சதவீதம் லீற்றரொன்று ரூபா 290 ஆக ஆகக்குறைந்த விற்பனை விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனியின் விற்பனைக் கொள்கை பெருமளவு மதுபான உற்பத்தியாளாகளிற்கு உயர் நலன்களை வழங்குகின்றதுடன் அதன் மூலம் கம்பனிக்கு பாரியளவு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பெலவத்தை மற்றும் செவனகல என்பன கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கந்தளாய் மற்றும் ஹிங்குரா சீனித் தொழிற்சாலைகள் கம்பனிக்கு வழங்கப்படாதிருந்ததால் அவை விளைவற்றிருந்தன.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) ரூபா 1,371,265 வருடாந்தக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கணக்குகள் தயாரிப்பதற்காக பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் கணக்கீட்டுப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த மென்பொருளிலுள்ள அனேகமான கூறுகள் கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 576,782,652 வங்கிமேலதிகப்பற்றிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 60,590,053 வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கம்பனியின் குறிக்கோள்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்காத பதுளை மாவட்டத்திலுள்ள அலுவலர்களுக்கிடையே அரசாங்க பெருந்தோட்ட அமைச்சினால் உறுதிகளை பகிந்தளிப்பதற்கான அனுசரணைகளாக ரூபா 1,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சிறியளவிலான கரும்பு விவசாயிகள் சீனி உற்பத்திச் செயற்திட்டம் - பதுளை இற்காக ரூபா 6,628,619 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய செலவினங்களின் சரியான தன்மை தொடர்பில் உரிய அலுவலரினால் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 782,843 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதி அரசியல்வாதியின் விபரங்கள் இதில் அச்சிடப்பட்டிருந்தமையால் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

(உ) கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தால் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பின்னர் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலரொருவர் பதுளை மாவட்டத்தில் கரும்பு விவசாயத்தினை அபிவிருத்தி செய்து விநியோகிப்பதற்கான இணைப்பு அலுவலராகவும் அதேநேரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அவருக்கு மாதமொன்றிற்கு ரூபா 100,000 தொகைப்படி 2014 இல் 11 மாதங்களிற்காக ரூபா 1,100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகத்தின் உள்ளபடியான பதவியணியினர் 17 ஆனதுடன் பெலவத்தை சீனிக் கைத்தொழிலின் 8 ஊழியர்கள் இந்தப் பதவியணியினரில் உள்ளடங்கியிருந்தனர். தலைமை அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், முகாமைத்துவ மட்ட அலுவலர்கள் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் இந்த நியமனங்கள் வருடாந்தம் புதுப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) செவனகல சீனித் தொழிற்சாலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னைய அலுவலர்களின் தனிநபர்க் கோவைகள் தொழிற்சாலையில் காணப்பட்டிருக்கவில்லை.

(இ) பெலவத்தை சீனித் தொழிற்சாலைக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுத்துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கிரய மற்றும் நிதிக் கணக்கீடு | சரியான கிரய மற்றும் நிதிக் கணக்கீட்டு முறைமை இல்லாமை |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடுகள் | வழக்கிழந்த இருப்புக்களை இனங்காண்பதன் மூலம் ஏற்பாடுகள் அல்லது பதிவளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் வயதுப் பகுப்பாய்வு ஊடாக அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன்களிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அட்டுறு செலவினங்கள் | நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை காணப்படவில்லை. |
| (ஊ) | பெறுகைகள் | பெறுகைகள் வழிகாட்டியிலுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி

## இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானக்கூற்று

**2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

| | குறிப்பு | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | 4 | 4,881,637,722 | 5,539,305,323 |
| விற்பனைக் கிரயம் | | (5,065,357,085) | (4,904,055,968) |
| **மொத்த இலாபம்** | | (183,719,363) | 635,249,355 |
| ஏனைய வருமானம் மற்றும் வருவாய் | 5 | 60,227,606 | 55,818,240 |
| நிருவாகச் செலவினம் | | (966,088,073) | (1,012,541,959) |
| நிதிச் செலவினம் | 6 | (80,753,493) | (50,047,247) |
| நிதி வருமானம் | 6 | 117,893,499 | 160,508,676 |
| வரிக்கு முன்னரான இலாபம் /நட்டம் | 7 | (1,052,439,824) | (211,012,935) |
| வருமான வரிச் செலவு | 8 | (14,860,706) | 60,175,975 |
| **வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)** | | (1,067,300,530) | (150,836,960) |
| **காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி** | | 16,473,290 | 59,138,063 |
| **காலப்பகுதிக்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/ (செலவினம்), தேறிய வரி** | | (1,050,827,240) | (9,16,98,897) |
| பங்கு ஒன்றிற்கான உழைப்பு/(நட்டம்) | 9 | (10,673,005) | (1,508,370) |

8 ஆம் பக்கம் முதல் 28 ஆம் பக்கம் வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் உள்ளார்ந்த பகுதியாகும்.

# வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
# நிதி நிலைமைக் கூற்று

## 2015 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | **குறிப்பு** | **ரூபா** | **ரூபா** |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 10 | 2,599,758,724 | 2,792,377,905 |
| பிற்போடப்பட்ட வரிச்சொத்து | 8 | 85,517,789 | 86,066,655 |
| | | 2,685,276,513 | 2,878,444,560 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 11 | 1,426,404,923 | 1,483,590,602 |
| உயிரியல் சொத்துக்கள் | 12 | 624,198,372 | 428,018,378 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 13 | 87,686,733 | 54,759,867 |
| முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும் | | 52,300,501 | 131,039,684 |
| விவசாயிகளிடமிருந்து வருமதியான கடன்கள் | 14 | 837,886,246 | 930,162,482 |
| சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து வருமதியான தொகை | 25.2 | 19,168,293 | - |
| முதலீடுகள் | 15 | 910,838,300 | 1,733,873,465 |
| காசும் காசிற்குச் சமமானவையும் | 21 | 43,492,326 | 6,851,025 |
| | | 4,001,975,694 | 4,768,295,504 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 6,687,252,208 | 7,646,740,064 |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 16 | 1,000 | 1,000 |
| அரசாங்க மானியம் | 17 | 4,047,990,194 | 4,048,080,194 |
| பகிரப்படாத இலாபம் | | (122,644,911) | 924,011,372 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | 3,925,346,283 | 4,972,092,566 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| இளைப்பாறல் நலப் பொறுப்புகள் | 19 | 429,568,312 | 412,697,156 |
| வட்டிக் கடன்கள் மற்றும் கடன்பெறுவனவுகள் | 18 | 127,417,201 | 143,104,631 |
| | | 556,985,513 | 555,801,787 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வட்டிக் கடன்கள் மற்றும் கடன்பெறுவனவுகள | 18 | 608,854,123 | 440,401,880 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 20 | 1,089,451,423 | 1,156,140,806 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 506,614,866 | 522,303,025 |
| சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நிலுவையான தொகை | | - | - |
| | | 2,204,920,412 | 2,118,845,711 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | 6,687,252,208 | 7,646,740,064 |

.....
**பொது முகாமையாளர் - நிதி**

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதுடன் சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்** **பணிப்பாளர்**

8 ஆம் பக்கம் முதல் 28 பக்கம் வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் உள்ளார்ந்த பகுதியாகும்.

**திகதி**

கொழும்பு

**உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று**

**2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

| | கூறப்பட்ட மூலதனம் | அரசாங்க மானியம் | ஒன்று திரட்டப்பட்ட இலாபங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2014 ஜனவரி 1 இல் உள்ளவாறானது | 1,000 | 3,554,855,177 | 1,095,710,269 | 4,650,566,446 |
| அரச மானிய மீள் கொடுப்பனவு | - | (774,983) | - | (774,983) |
| இயந்திர உபகரண மீள்பெறுமதியீடு | - | 494,000,000 | - | 494,000,000 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | (80,000,000) | (80,000,000) |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | (150,836,960) | (150,836,960) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | 59,138,063 | 59,138,063 |
| மொத்த விரிவான வருமானம் | - | - | (91,698,897) | (91,698,897) |
| **2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறானது** | 1,000 | 4,048,080,194 | 924,011,372 | 4,972,092,566 |
| அரச மானிய மீள் கொடுப்பனவு | - | (90,000) | - | (90,000) |
| தலைமை அலுவலக ஐந்தொகையில் சீராக்கற் பதிவு | | | 4,170,957 | 4,170,957 |
| முன்னைய உரிமையாளர் சார்பில் கம்பனியால் செலுத்தப்பட்டது. | - | - | - | - |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | (106,7,300,530) | (1,067,300,530) |
| ஏனைய விரிவான வருமானம் | | | 16,473,290 | 16,473,290 |
| மொத்த விரிவான வருமானம் | - | - | (1,050,827,240) | (1,050,827,240) |
| **2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறானது** | 1,000 | 4,047,990,194 | (122,644,911) | 3,925,346,283 |

8 முதல் 28 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளார்ந்த பகுதியாகும்.

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி**

**காசுப்பாய்ச்சற் கூற்று**

| **2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | **குறிப்பு** | **2015** | **2014** |
|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** |
| வருமான வரிச் செலவினங்களுக்கு முன்னரான இலாபம்/(நட்டம்) | | (1,052,439,824) | (211,012,935) |
| **சீராக்கங்கள் :** | | | |
| பெறுமானத்தேய்வு | 10 | 307,601,752 | 278,540,745 |
| ஆதன, இயந்திர உபகரண நட்டம் | | - | - |
| நிதி வருமானம் | 6 | (117,893,499) | (160,508,676) |
| நிதிச் செலவு | 6 | 80,753,493 | 50,047,247 |
| ஓய்வூதிய நலன் பொறுப்பிற்கான ஏற்பாடு | 19 | 67,391,139 | 121,540,071 |
| மென்நகர்வு பொருட்பட்டியலுக்கான ஏற்பாடு | 11 | - | 8,194,045 |
| அறவிடமுடியாக் கடன் | | - | 1,919,319 |
| பொறுப்புக்களை திருப்பி எழுதுதல் | | - | (504,941) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | (714,586,940) | 88,214,875 |
| பொருட்பட்டியல்களிலான (அதிகரிப்பு) /குறைவு | | 57,185,679 | 161,115,254 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப் பெறவேண்டியவைகளிலான அதிகரிப்பு | | 26,644,024 | (9,015,085) |
| விவசாயிகளிடமிருந்தான கடன்களிலான குறைவு | | 92,276,236 | (167,878,815) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளிலான அதிகரிப்பு.'.(குறைவு) | | (66,689,383) | (25,319,640) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | | (605,170,384) | 47,116,590 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (30,000,000) | - |
| செலுத்தப்பட்ட ஓய்வூதிய நலன் பொறுப்பு | 19 | (34,046,693) | (46,040,698) |
| | | (669,217,077) | 1,075,892 |
| ஆதன, இயந்திர உபகரணக் கொள்வனவு | | (124,470,572) | (236,522,276) |
| நிலையான வைப்புக்களின் முதலீடுகளின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | 823,035,165 | (164,970,508) |
| உயிரியல் சொத்துக்களில் முதலீடு | | (196,179,994) | - |
| ஆதன, இயந்திர உபகரண விற்பனையிலிருந்தான பெறுவனவுகள் | | 9,488,000 | 3,771,000 |
| பெறப்பட்ட நிதி வருமானம் | 6 | 117,893,499 | 160,508,676 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | 629,766,099 | (237,213,109) |
| பெறப்பட்ட கடன்கள் | | - | - |
| கொடுத்து தீர்க்கப்பட்ட கடன்கள் | 18 | 2,056,073 | (10,932,248) |
| முன்னைய உரிமையாளர் சார்பில் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | | - | - |
| அரச மானிய மீள் கொடுப்பனவு | 17 | (90,000) | (774,983) |
| நிதி குத்தகை கடப்பாடுகளின் கீழான பிரதான கொடுப்பனவுகள் | 18 | (26,975,280) | (18,687,116) |
| செலுத்தப்பட்ட வட்டி | 6 | (80,753,493) | (50,047,247) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | | - | (80,000,000) |
| நிதி செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்கள் | | (105,762,701) | (160,441,594) |
| தலைமை அலுவலக ஒதுக்கங்களிற்கு சீராக்கம் | | 4,170,957 | - |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய அதிகரிப்பு /(குறைவு) | | (141,042,721) | (396,578,812) |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவை | 21 | (392,247,607) | 4,331,205 |
| வருட இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவை | 21 | (533,290,327) | (392,247,607) |

8 முதல் 28 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளார்ந்த பகுதியாகும்.

## 1. கூட்டமைப்புத் தகவல்

### 1.1 பொது

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதோர் நிறுவனமாகும். அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட பின்னர் கம்பனியானது தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியாக நிறுவப்பட்டது. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனயின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் இல 27, மெல்போன் அவெனியூ, கொழும்பு – 04 எனும் முகவரியில் அமைந்துள்ளதுடன் அதன் பிரதான வியாபார இடம் எம்பிலிப்பிட்டியவிலும் புத்தளவிலும் அமைந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட நிறுவனமொன்றாக கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர், பெல்வத்தை சீனிக் கைத்தொழில் நிறுவனத்தினதும் செவனகல சீனிக் கைத்தொழில் நிறுவனத்தினதும் சொத்துக்களும் பொறுப்புக்களும் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனிக்கு 2012 ஒக்டோபர் 01 ஆம் திகதி கைமாற்றப்பட்டன.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

நிதிக் காலப்பகுதியின் போது, கரும்பு வேளாண்மை, சீனியையும் எதனோலையும் உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாகக் காணப்பட்டன.

### 1.3 விநியோகத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

பணிப்பாளர் சபையால் 2016 மே 31 அன்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் விநியோகத்திற்கென அதிகாரமளிக்கப்பட்டன.

## 2. பொதுக் கொள்கைகள்

### 2.1 தயாரிப்பு அடிப்படை

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைக்கூற்று, இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானம், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சற் கூற்றுக்களையும் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

வேறொரு முறையில் குறிப்பிடப்பட்டாலன்றி கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 2.1.1 இணங்கி ஒழுகுதல் கூற்று

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. இந் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் சமர்ப்பணமும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கியுள்ளன.

### 2.1.2 தொடர்ந்து இயங்கும் நிலை

நடக்கப் போவதை முன்னறியக்கூடிய எதிர்காலத்தில் இயங்கும் ஸ்தாபனமாகத் தொடர்ந்தும் இருப்பதற்கான கம்பனியின் இயலுமை குறித்த மதிப்பீடொன்றை பணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளதுடன் அவர்களுக்கு கலைப்பதற்கோ அல்லது வர்த்தகத்தை நிறுத்துவதற்கான நோக்கம் எதுவுமில்லை.

### 2.2 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் குறித்த சுருக்கம்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கம்பனியால் பின்வரும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டன.

### 2.2.1 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் கம்பனியால் ஆரம்பத்தில் இருந்தே இலங்கை ரூபாவில் (LKR) மேற்கொள்ளப்பட்டு வருவதனாலும், நிறுவனத்துடன் தொடர்புடைய அடிப்படையான நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளின் பொருளாதார சாரம்சத்தை இவ்வாறான நிலை திறம்பட பிரதிபலிக்கும் என்பதனாலும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றன.

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலைத்து நிர்ணயிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய விகிதத்தில் மாற்றப்பட்டு வருகின்றன. அறிக்கையிடும் திகதியில் வெளிநாட்டு நாணயங்கள் வகைப்படுத்தப்படும் திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் வகைப்படுத்தப்படும் நாணய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், அத் திகதியில் நிலைத்து நிர்ணயிக்கப்பட்ட பரிமாற்று வீதத்தைக் கொண்டு இலங்கை ரூபாவில் மாற்றப்பட்டு வருகின்றன. நாணய மாற்றலில் எழுகின்ற அந்நிய செலாவணி வேறுபாடுகள், இலாப நட்டக்கூற்றில் கருத்திற்கொள்ளப்பமுகின்றது.

நாணய மாற்றலில் எழுகின்ற அந்நிய செலாவணி வேறுபாடுகள், இலாப நட்டக் கூற்றுக்களில் கொண்டுவரப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்றுச் செலவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் நாணயமற்ற சொத்துக்களும் பொறுப்புக்களும் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நாணய விகிதத்திலேயே மாற்றப்பட்டு வருகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் நியாயப் பெறுமதி அளவிடப்படும் நாணயமற்ற விடயங்கள், நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலான நாணயப் பரிமாற்ற விகிதங்களைக் கொண்டே மாற்றப்பட்டுவருகின்றன. நூாணயமற்ற விடயங்களை மீள மாற்றுவதால் உருவாகும் இலாபம் அல்லது நட்டமானது விடயத்தின் நியாயப் பெறுமதியிலான மாற்றத்தின் இலாபம் அல்லது நட்டம் குறித்த அங்கீகாரமாகவே கருதப்பட்டு வருகின்றது. (அதாவது, ஏனைய விரிவான வருமானம் அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளம் காணப்படும் நியாயப் பெறுமதியிலான இலாபம் அல்லது நட்டத்தை ஏற்படுத்தும் பொருட்கள் மீதான மாற்று வேறுபாடுகளும் முறையே விரிவான வருமானம் அல்லது இலாபம் அல்லது நட்டம் ஆகியவற்றிலும் அடையாளங் காணப்பட்டு வருகின்றன.

### 2.2.2 வருமான அங்கீகாரம்

குறித்த வருமானம் கம்பனிக்கு பொருளாதார நன்மைகள் கிட்டுமெனவும் நம்பக்கூடிய அளவில் அளவிடப்பட்டு எப்போது கொடுப்பனவு செய்யப்படுகின்றதென்பதைக் கருத்திற் கொள்ளாது வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்த ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொடுப்பனவு விதிமுறைகளையும், வரிகள் அல்லது தீர்வைகள் நீங்கலாக கருத்திற்கொண்டே பெறப்பட்ட அல்லது பெறக்கூடிய நலனின் நியாயப் பெறுமதியிலேயே அளவிடப்படுகின்றது. கம்பனி, முதல்வர் அல்லது முகவராக செயற்படுகின்றதா என்பதை நிர்ணயிப்பதற்கான குறிப்பிடக்கூடிய பிரமாணங்கள் மீதான தனது வருமான ஒழுங்குகளை மதிப்பிட்டு வருகின்றது. தனது வருமான ஒழுங்குகள் அனைத்திலும் தான் முதல்வராகவே செயற்படுவதாக கம்பனி முடிவிற்கு வந்துள்ளது. கீழே விபரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அங்கீகாரப் பிரமாணங்களும் வருமானம் அங்கீகரிக்கபடுவதற்கு முன்னர் உகந்தவாறு பின்பற்றப்பட வேண்டும்.

**பொருட்களின் விற்பனை**

முக்கியமான இடர்களும் பொருட்களின் உரிமத்தின் குறித்த வெகுமானங்களும் பொருட் கொள்வனவாளரிற்கு மாற்றப்படும் நிலையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மீது உரிமத்திலோ அல்லது பயனுறுதியான கட்டுப்பாடு இல்லாத நிலையில் பொருட்கள் விற்பனையில் இருந்தான வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**வட்டி வருமானம்**

காலக்கழிவின் அடிப்படையில் அளவிடப்படும் வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட்ட செலவில் அளவிடப்படும் அனைத்து நிதிசார் பத்திரங்கள் மற்றும் விற்பனைக்குக் கிடைக்குமென வகைப்படுத்தப்படும் வட்டி தரும் நிதிசார் பொறுப்பின் நிகர தேறிய பெறுமதிக்கு, நிதிசார் பத்திரத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் அல்லது குறுகிய காலப் பகுதியொன்றின் மூலம் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவை அல்லது வருவாய்களைத் சரியான முறையில் தள்ளுபடி செய்யும் பயனுறுதிமிக்க வட்டி விகிதத்தைப் பாவித்து வட்டி வருமானம் அல்லது செலவினம் பதிவுசெய்யப்படுகின்றது. வட்டி வருமானமானது, இலாப நட்டக் கூற்றிலுள்ள நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

**சொத்துக்களைப் பராதீனம் செய்யும் வகையில் ஏற்படும் வருவாய்களும் நட்டங்களும்**

சொத்துக்கள் பராதீனம் செய்யும் வகையில் ஏற்படும் இலாப, நட்டங்களை சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகைகளுடன் தேறிய விற்பனை முன்னெடுப்புக்களை ஒப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்படுவதுடன், இலாப நட்டக் கூற்றில் "ஏனைய தொழிற்படும் வருமான" த்திற்குள் வரும் தேறியவையாக அடையாளம் காணப்படுகின்றன. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் விற்கப்படுகையில், மீள்மதிப்பீட்டு மிகை ஒதுக்கத்தில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் பிடித்துவைக்கப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்படுகின்றன.

### 2.2.3 வரி

**நடைமுறை வரிகள்**

வருமான வரிச் செலவானது, நடைமுறை வருமான வரியை உள்ளடக்குகின்றது. உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும் விடயங்களுடன் தொடர்புடைய வருமான வரிச் செலவு தவிர்ந்தவை இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நடைமுறை வரியானது, அறிக்கையிடப்படும் திகதியில் சட்டமாக்கப்பட்ட வரி விகிதங்களைக் கொண்டு, காலப்பகுதிக்கான வரியிடத்தக்க வருமானத்தின் மீது செலுத்தப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் வரியும் முன்னைய வருடங்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் சீராக்கப்பட்ட வரியுமாகும்.

***விற்பனை வரி***

வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துக்கள் விற்பனை வரியின் தேறிய தொகையினை அங்கீகரிக்கின்றன, தவிர:

- சொத்துக்கள் அல்லது சேவைகளை வாங்கும்போது விற்பனை வரி ஏற்படும் போது விற்பனை வரியானது, குறித்த சொத்தின் பாகமாக அல்லது விலையுயர்ந்த பொருளின் பாகமாக பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்படுகின்றமை.
- விற்பனை வரியின் அளவுடன் குறிப்பிடப்பட்ட பெறத்தக்கவைகள் மற்றும் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்படும்.

வரிவிதிப்பு அதிகாரிகளிடமிருந்து அறவிடக்கூடிய அல்லது அவர்களுக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரியின் நிகர தொகை நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய அல்லது செலுத்த வேண்டியவைகளின் பாகமாக உள்ளடக்கப்படுகின்றது.

***பிற்போடப்பட்ட வரி***

பிற்போடப்பட்ட வரி, நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த கொண்டு செல்லும் தொகைக்கும், வரிவிதிப்பு நோக்கிற்கான தொகைகளுக்குமிடையேயான தற்காலிக வேறுபாட்டு வரி பயனுக்காக வழங்கும் ஐந்தொகைப் பொறுப்பு முறையைப் பயன்படுத்தியே வழங்கப்படுகின்றது.

**2.2.4. செலவுகள்**

வியாபாரத்தை நடாத்துவதால் ஏற்படும் செலவுகள் அக்காலப்பகுதிக்கான இலாபத்தை நிர்ணயிப்பதற்காக வருமானத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது.

திருத்தங்கள், மற்றும் புதுப்பித்தல்கள் என்பன செலவுகள் ஏற்பட்ட காலப்பகுதியின் இலாப நட்டத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது.

**2.2.4.1.இரவல் கிரயம்**

இரவல் கிரயம் அது ஏற்பட்ட காலப்பகுதியில் ஒரு தகுதி உள்ள சொத்தின் உற்பத்தி அல்லது சுவீகரிப்பு கட்டட அமைப்பு என்பனவற்றின் நேரிடையான வரையறை என்பனவற்றைத் தவிர ஒரு செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. அச் சூழ்நிலையில் அவை சொத்தின் செலவில் ஒரு பாகமாக மூலதனமாக்கப்படுகின்றது.

**2.2.4.2.நிதிச் செலவு**

நிதிச் செலவுகளில் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட கடன்களின் வட்டி செலவுகள் உள்ளடங்கியுள்ளன. தகுதியுள்ள ஒரு சொத்தின் உற்பத்தி அல்லது

சுவீகரிப்பு, கட்டமைப்புடன் நேரடித் தொடர்பற்ற இரவல் கிரயங்கள் உரிய வட்டி முறைகளை பாவித்து இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களின் இலாப நட்டங்கள் தேறிய அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

### 2.2.5. சொத்து, இயந்திரத்தொகுதி மற்றும் உபகரணங்கள்

**சொந்தமுள்ள சொத்துக்கள்**

